
# தணியாத தமிழ்த் தாகன்



மரு. பொன் சத்தியநாதன்

17.11.1948 - 15.09.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




..........................................

..........................................................................

தமிழ்மொழி தமிழ்மண் தமிழ்க்கலை தமிழ்ப்பண்பு
தமிழ்மதமாம் வள்ளுவம் யாவும் ஒன்றித்தான்

தமிழும் நீடித்து வாழமுடியும்.

எம்மை எது பிரித்தாலும் தமிழும்
அணைக்கும்
இணைக்கும்
பிணைக்கும்

அன்புடன்

தைப்பொங்கல் வாழ்த்துக்கள்



*கீழ்க்கரவை*
*பொன் சத்தியநாதன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்தின் வடபகுதியின் யாழ்ப்பாணத்தில் இணுவில் வைத்தியசாலையில் நவம்பர் 17, 1948 இல் பிறந்த திரு பொன். சத்தியநாதன் அவர்கள் வடமராட்சி கரவெட்டியைச் சொந்த ஊராகக் கொண்டிருந்தார். யாழ்ப்பாணம் பெரியபுலம், வண்ணார்பண்ணையில் தனது தொடக்கக் கல்வியை முடித்துக்கொண்டு பருத்தித்துறையில் Hartley கல்லூரியில் நான்காம் தரத்திலிருந்து உயர்தரம் வரை படித்தார். சிறுவயதிலேயே கல்வியில் மிகச்சிறந்து விளங்கினார்.

பின்னர் மருத்துவப்படிப்புக்குத் தேர்வாகி கொழும்புப் பல்கலைக்கழகத்தில் மருத்துவப்பட்டப்படிப்பை நிறைவுசெய்தார். பின்னர் கொழும்பு போதனா வைத்தியாசலையில் தனது பட்டறிவுப் பயற்சியையும் முடித்தார். பின்னர் யாழ் போதனா வைத்தியசாலையில் மருத்துவராகவும் கடமையாற்றினார்.

இளமையிலேயே தமிழ் மொழியில் ஆர்வம் கொண்டிருந்த அவர் சிறிலங்கா அரசு "சிங்களம் மட்டும் சட்டம்" கொண்டு வந்தபோது அது தொடர்பான விழிப்புணர்வை ஊட்டும் வகையில் கலைநிகழ்வுகளை நடத்தினார்.

தமிழர்களின் ஆயுத விடுதலைப் போராட்டத்தில் முதற்களப்பலியான பொன். சிவகுமாரன் சயனைட் உட்கொண்ட நிலையில் மயக்கத்தோடு யாழ். வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டபோது அங்கு இளநிலை மருத்துவராகக் கடமையிலிருந்தவர் பொன். சத்தியநாதன். சிவகுமாரனின் இழப்பும் அதனைத் தொடர்ந்த நாட்களும் தமிழ்த் தேசியத்தை நோக்கிய அவர் பயணத்தை வீச்சாக்கியது.

1976 மார்கழியில் தனது வாழ்க்கைத்துணையான மருத்துவர் நளாயினியை மணமுடித்தார். அந்நேரத்தில் இவர்களது திருமணம் அதிகம் பேசப்பட்ட திருமணமாக அமைந்தது. தமிழ்முறைப்படிதான் மணம்புரிவேனென்று அடம்பிடித்து மரபுகளைப் புறந்தள்ளி நிகழ்ந்தது அத்திருமணம்.

யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பகுதிகளில் மருத்துவராகப் பணியாற்றியபின்னர் புலம்பெயர்ந்துசெல்லவேண்டிய நிலைக்கு சத்தியநாதன் ஆளானார்.

1979இல் பிரித்தானியா சென்று அங்கு மருத்துவராகப் பணிகளைத் தொடர்ந்தார். பல்வேறு மருத்துவமனைகளில் பணியாற்றினாலும், தமிழ்மீதும் தமிழீழ விடுதலை மீதும் அவர் கொண்ட பற்றினால் போகிற இடமெல்லாம் புதிய முயற்சிகளை மேற்கொண்ட வண்ணமேயிருந்தார். பின்னர் மேற்படிப்புக்காக 1986 மாசி மாதத்தில் அவுஸ்திரேலியாவுக்கு வந்தடைந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகநல நோக்கில் தனது மேற்படிப்பைத் தொடர்வதை நிறுத்திக்கொண்டு தனது மனைவி நளாயினியோடு மருத்துவராகப் பணியாற்றத் தொடங்கினார். அந்நேரத்தில் அகதிகளாக அவுஸ்திரேலியா வந்தடைந்த தமிழர்களுக்கான உதவிகளை வழங்குவதில் முனைப்புடன் செயற்பட்டார். இந்நேரத்தில்தான் தமிழ் ஏதிலிகள் கழகத்தை ஏனைய சிலரோடு சேர்ந்து தொடங்கிச் செயற்படுத்தினார்.

தமிழ் மொழியை நவீன தொழிநுட்பத்திற்கான தளத்திற்கு நகர்த்துவதற்கு பேச்சு மொழியை எழுத்தாக தன்னியக்கமாக மாற்றும் செயலியை வடிவமைப்பதில் நீண்ட ஆய்வுப்பணிகளை மேற்கொண்டார்.

இதற்காக தமிழ் மொழியின் தொன்மையான இலக்கணங்களைக் கற்றதுடன் ஆங்கிலம் தவிர்ந்த வேற்று மொழிகளையும் கற்று மொழி ஆய்வை விரிவுபடுத்திக் கொண்டார்.

தமிழ் மொழியின் பயன்பாட்டை புலம்பெயர் தமிழர் மத்தியில் உறுதிப்படுத்துவதற்காக பல்வேறு கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் சிட்னி மெல்பேண் பெருநகரங்களில் நடத்தினார். உலகந்தழுவிய ரீதியில் நிகழ்ந்த பல்வேறு மொழியியல் மாநாடுகளிலும் அவர் பங்குகொண்டுள்ளார்.

வள்ளுவ நெறியைப் பின்பற்றியே தமிழர் வாழ்வு சிறக்கமுடியும் எனவும் அதற்காக திருக்குறளைப் பரப்பும் பணியில் ஈடுபட்டார். தனது சொந்த நிதியில் பெரும் எண்ணிக்கையான திருவள்ளுவர் சிலைகளை செய்வித்து தானாகவே கொண்டுசென்று அவற்றை தமிழ்மக்களுக்குக் கொடுத்தார். ஒவ்வொரு தமிழர் வீடுகளிலும் அவை இருக்கவேண்டும் என்பது அவரது நிலைப்பாடாக இருந்தது. "குறளே என் வேதம்! வள்ளுவமே என் மதம்!" என்ற தாரக மந்திரத்தைத்தான் தனது வீட்டில் எழுதி வைத்திருந்தார்.


தமிழருடன் தமிழில் பேசுங்கள் எனவும் தமிழையும் ஆங்கிலத்தையும் கலந்து பேசாதீர்கள் எனவும் தான் செல்லும் இடமெலாம் தொடர்ந்தும் வலியுறுத்துவார் அவர். மருத்துவ கலாநிதியாக பிரித்தானியா மற்றும் அவுஸ்திரேலிய நாடுகளில் பணி செய்தபோதும் தமிழில் பேசும்போது ஆங்கில சொற்களை கலக்காமல் பேசுவார்.

1990 களின் ஆரம்ப பகுதியில் கிளாலி நீரேரி ஊடாகவே யாழ்ப்பாணத்துக்கான போக்குவரத்துகள் நடைபெற்றுவந்தன. ஒவ்வொரு படகுப் பயணத்தின் போதும் பல உயிரிழப்புகள் இடம்பெற்றுவந்தன.

அத்தகைய இடர்மிகுந்த பாதை ஊடாக பயணம் மேற்கொண்டு தன்னோடு கணினிகளைக் கொண்டு சென்று வடபகுதியை சென்றடைந்த அவர் தமிழீழ விடுதலைப் புலிகள் ஊடாக பல்வேறு தமிழர் நலன்சார் திட்டங்களை மேற்கொள்ள பல உதவிகளை செய்தார்.

அதன் பின்னர் 2002 இல் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியபின்னர் மீண்டும் தாயகம் சென்ற அவர் தமிழ் மொழியை நவீன தொழில்நுட்பத்துக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையில் வளர்ப்பதற்கான பல்வேறு திட்டங்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்களுடனும் தமிழீழ நிதித்துறை பொறுப்பாளரும் தமிழ் வளர்ச்சித்துறைப் பொறுப்பாளருமான தமிழேந்தி அவர்களுடனும் நீண்ட கலந்துரையாடல்களை நடத்தினார். அந்நேரத்தில்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனது ஆசான் பண்டிதர் பரந்தாமன் அவர்களின் வேர்ச்சொல் அகராதி நூலொன்று வெளியிடப்படாமல் இருந்ததைக் கண்டு தானே முன்னின்று தனது செலவிலேயே ஆயிரக்கணக்கான நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டார். தமிழகத்தின் தமிழ் ஆய்வாளர் முனைவர் அரசேந்திரன் அவர்களின் "கல் - வேர்ச்சொல் அகராதி" என்ற நூற்றொகுப்பை வன்னியிலும் வெளியிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையினதும் அதன் போராளிகளினதும் அதீத ஈடுபாடுகளால் கவரப்பட்ட அவர் பல்வேறு தமிழர் நலன்சார் திட்டங்களை முன்னெடுத்தார்.

அதன் தொடர்ச்சியாக தலைவர் பிரபாகரனின் மகன் சார்ல்ஸ் அன்ரனியுடன் இணைந்து பல்வேறு தொழில்நுட்பசார் வேலைதிட்டங்களில் ஈடுபட்டார். தமிழ் வளர்ச்சி தொடர்பான தனது நீண்டகாலத் திட்டங்களுக்கு போராளிகளின் பங்களிப்பு இருந்தால் மிகப்பயனுள்ளதாகவும் வெற்றிகரமாகவும் இருக்குமென்று அவர் நம்பினார். இதற்கு அப்பால் தமிழகத்திலும் மலேசியாவிலும் அங்குள்ள தமிழ் ஆர்வலர்கள் ஊடாக பல்வேறு தமிழர் நலன்சார் திட்டங்களை முனைப்புடன் முன்னெடுத்தார்.

தமிழினத்தின் பாதுகாப்பும் வளர்ச்சியும் பொருளாதாரபலத்தில் தங்கியுள்ளதை மிக ஆழமாக உணர்ந்திருந்தார். எல்லாவேளைகளிலும் பொருளாதாரபலத்தைப் பெருக்குவது குறித்து அவர் அதீதமாக சிந்தித்துக்கொண்டும் முயன்றுகொண்டுமிருந்தார். தமிழர்களுக்கான தனிவங்கியொன்றை நிறுவி உலகம்முழுவதும் வாழும் தமிழ்ர்கள் அனைவரும் பயன்பெறும் திட்டமொன்றை அவர் பல்லாண்டுகளாகப் பேசிவந்ததோடு அதைச் செயற்படுத்தும் நிலையைநோக்கி நகர்ந்துமிருந்தார்.


தமிழர் புலம்பெயர் நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான சர்வதேச அரசுகளின் கூட்டிணைந்த நெருக்கடியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோது 2006 இல் அவுஸ்திரேலிய புலனாய்வு அமைப்பின் மூலம் இவருக்கு எதிராகவும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தன்னால் அதிக பணிகள் செய்யப்படவேண்டும் என்ற அவரது தன்னியல்பான அர்ப்பணிப்பும் தாயகத்தில் தொடர்ந்துவந்த தமிழர் மீதான இனப்படுகொலை நிகழ்வுகளும் அவரை வெகுவாக பாதித்தன.

தாயகத்திற்கு பயணம் மேற்கொள்கின்ற ஒவ்வொரு தருணத்திலும் அவரில் ஏற்படுகின்ற மனநிறைவான தருணங்கள் அவருக்கு மகிழ்வை கொடுத்தாலும் அங்கு சென்று திரும்பி வந்தபின்னர் அவசர கதியான உலகம் அவருக்கு இறுக்கத்தை கொடுத்திருக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



24 மணிநேரமும் எதையாவது செய்யவேண்டும் எமது மக்களுக்கு எதையாவது செய்யவேண்டும் என எப்போதுமே துடித்துக்கொண்டிருந்த அந்த இதயம் தனக்காகவும் துடிக்கவேண்டும் என்பதை மறந்தது போலும்.

ஓய்வற்ற பணியும் ஓய்வற்ற சிந்தனையும் கட்டாய ஓய்வை நோக்கி அவரை தள்ளியது.

உன்னதமான சிந்தனையுடனும் உயரிய செயற்பாடுகளுடனும் உண்மையாகவே வாழ்ந்த பொன். சத்தியநாதன் என்றும் நினைவுகளாய் நிலைத்திருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத்தமிழர்பேரமைப்பு

6, தெற்கு மதகுத் தெரு, **(South Lock Street)**
(கோட்டூர்புரம் தொடர்வண்டி நிலையம் எதிரில்) கோட்டூர்புரம், சென்னை - 600 085.
**தொலைபேசி:91-44-22640421, தொலைநகலி:91-44-22640451.**
E-mail : thamiz@thenseide.com


தலைவர்: **பழ. நெடுமாறன்**

நாள் : 16-09-17

## மறக்க முடியாத மாமனிதர் மருத்துவர் பொன். சத்தியநாதன்

மருத்துவர் பொன். சத்தியநாதன் அவர்கள் ஆஸ்திரேலியாவில் மறைந்த செய்தி கேட்டு அளவில்லாத துயரம் அடைந்தேன். ஏறத்தாழ 15 ஆண்டு காலத்திற்கு மேலாக மிக நெருங்கிப் பழகிய இனிய நண்பர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முழுமையாக ஈடுபட்டு எல்லா வகையிலும் அப்போராட்டம் முன்னெடுக்கப்பட உதவியவர். தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவராகத் திகழ்ந்தார்.

2002ஆம் ஆண்டில் உலகத் தமிழர் பேரமைப்பினை நிறுவுவதற்கு எனக்குத் தோள் கொடுத்துத் துணை நின்றார். நான் தலைவராகவும், அவர் செயலாளர் நாயகமாகவும் பொறுப்பேற்று உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் வேலையில் ஈடுபட்டோம்.

சென்னையில் கோட்டூர்புரத்தில் உலகத் தமிழர் பேரமைப்பின் தலைமை அலுவலகத்தை நிறுவ, அவரும் அவருடைய துணைவியார் மருத்துவர் நளாயினி சத்தியநாதன் அவர்களும் இணைந்து ஒரு கட்டிடத்தை அளித்ததை நன்றியுடன் நினைவுகூர்கிறேன்.

கடந்த சில ஆண்டுகளாக தனது நினைவை இழந்த நிலையில் அவர் இருப்பதை அறிந்து நானும் மற்றும் உலகத் தமிழர்கள் பலரும் ஆழ்ந்த கவலையடைந்தோம். ஆனால், தன் நினைவு திரும்பாமலேயே அவர் மறைந்துவிட்டார்.

அவர் மருத்துவராக மட்டும் அல்ல. சிறந்த மொழியியல் அறிஞராகவும் விளங்கினார். உலக நாடுகள் பலவற்றுக்கும் சென்று அங்கு வாழும் தமிழர்களின் குழந்தைகளின் பேச்சு வழக்கில், பிறமொழிக் கலப்பு எந்த அளவிற்கு உள்ளது என்பதை ஆய்ந்து அவர் வெளியிட்ட கருத்துக்கள் புலம்பெயர்ந்த தமிழர்களை ஆழமாகச் சிந்திக்க வைத்தன.

உலகத் தமிழர் பேரமைப்பின் செயலாளர் நாயகமாக திகழ்ந்து அருந்தொண்டாற்றிய அவரை தமிழ்கூறும் நல்லுலகம் ஒருபோதும் மறக்காது.

அவருடைய பிரிவினால் வருந்தும் அவரது துணைவியார் திருமதி. நளாயினி அவர்களுக்கும் மற்றும் குடும்பத்தினருக்கும் உலகத் தமிழர் பேரமைப்பின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புள்ள,


பழநெடுமாறன்

*(பழ. நெடுமாறன்)*

தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தமிழ்ப்பற்றாளர் மருத்துவர் பொன். சத்தியநாதன்

எப்போதுமே ஓய்வற்று பொதுப்பணிக்காக தன்னை அர்ப்பணித்த தமிழ்ப்பற்றாளர் மருத்துவர் பொன். சத்தியநாதன் அவர்களின் துயரமான மறைவு தமிழ் மக்களுக்குப் பேரிழப்பாகும்.

தமிழீழத் தாயகத்தில் தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட அடக்குமுறைகள் தமிழ்மக்கள் அனைவரையுமே உயிரை அர்ப்பணித்துப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளின் பின்னே அணிதிரட்டியது.

தமிழ் மக்களின் விடுதலை என்பது அதன் அடிப்படையான மண்விடுதலை மூலமே சாத்தியமாகும் என்பதை ஆழமாக விளங்கிக்கொண்ட மருத்துவர், அந்த நில விடுதலைக்காக போராட்டத்துடன் தன்னை ஆழமாக இணைத்துக் கொண்டார்.

சுதந்திரமான தாயகத்தில் தமிழ்மொழியைப் பாதுகாத்து தமிழ்த் தேசிய அடையாளங்களைப் பேணி சீரிய பண்புள்ள சமுதாயமாக தமிழினம் வாழவேண்டும் வளரவேண்டும் என்பதே அவரது நோக்கமாக இருந்ததது. தன்னைத் தேடி வரும் மக்களுக்கு உதவி செய்வதோடு நின்றுவிடாது தான் தேடிச் சென்று உதவும் தாராளமனம் படைத்தவராக மொழியால் அனைவரையும் இணைத்தவராக அனைவரும் போற்றிய பெருமனிதனாக அவர் வாழ்ந்தார்.

தனக்காக எதுவும் சேர்த்துவைத்துப் பொருள் தேடவேண்டும் என்ற தனிமனித ஆசைகளைத் துறந்து தமிழர் வாழ்வு என்ற பொதுநோக்கிற்காக தனது நேரங்களை தனது சொத்துக்களை முழுமையாகவே செலவழித்தார். ஒப்புயர்வற்ற தியாகங்களைப் புரிந்த விடுதலை இயக்கத்தின் மீதும் அதன் தலைமை மீதும் அளவற்ற பெருமதிப்பைக் கொண்டிருந்த அவர் தமிழ் மொழி வளர்ச்சிக்காக பல பணிகளை அவர்களுடன் இணைந்து மேற்கொண்டார்.

தமிழ்மொழிக்கான நவீன தொழிநுட்ப ரீதியான ஆய்வுகளை மேற்கொண்டிருந்த அவர் அந்தப்பணிகளை முழுமைப்படுத்துவதற்காக கடுமையாக ஓய்வற்று உழைத்துக்கொண்டிருந்தார். இன்று நாம் அந்தப் பெருமனிதனை இழந்துவிட்டோம். இவரது தொடர் பயணத்தில் எப்போதுமே புன்முறுவலுடன் இணைந்து நின்ற அவரது துணைவியார் மற்றும் அவரது உறவினர்கள் நண்பர்கள் அனைவரது துயரத்திலும் நாமும் பங்குகொள்கின்றோம்.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு " அவுஸ்திரேலியா "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Eelam Tamil Association Victoria (Inc)**
**Established: 1978, ABN:91 718 358 556, Incorporation No: A0007477N**
**ஈழத் தமிழ்ச் சங்கம் விக்ரோரியா (இணைக்கப்பட்டது)**
**Address: P O BOX 4337, Burwood East LPO, Burwood East, VIC–3151, Australia**

## வைத்திய கலாநிதி திரு பொன் சத்தியநாதன்

வைத்திய கலாநிதி திரு பொன் சத்தியநாதன் அவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை *(15.09.2017)* அன்று எம்மை விட்டு பிரிந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு நாம் எல்லோரும் ஆழ்ந்த கவலை அடைந்தோம்.

திரு பொன் சத்தியநாதன் அவர்கள் ஈழத்தமிழர்கள் மத்தியில் மட்டும் அல்ல இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் வாழும் தமிழர்கள் மத்தியிலும் மிகவும் பிரபல்யமானவர்.

அவருக்கு தமிழின்மேல் இருந்த மதிப்பும், பக்தியும், தமிழை மேலும் வளர்க்கவேண்டும் என்ற அவாவும், வெளிநாடுகளில் பிறந்து வளரும் தமிழ்ச் சிறார்களுக்கும் தமிழைக் கற்பிக்கவேண்டும் என்ற ஆர்வமும் திரு பொன் சத்தியநாதன் அவர்களை ஓயாமல் உழைக்கவைத்தன.

திரு பொன் சத்தியநாதன் அவர்கள் தமிழுக்காகவும், தமிழின் வளர்ச்சிக்காகவும் எதையும் செய்யத் தயங்கமாட்டார். பகலில் மருத்துவராக வேலை செய்துகொண்டு, அதற்குப்பின் பலமணி நேரங்கள் தமிழுக்காக உழைப்பார்.

மெல்போனில், ஈழத்தமிழ்ச் சங்கத்துடன் தன்னை இணைத்துக்கொண்டு, அதன் ஊடாக அவுஸ்திரேலியாவில் தமிழின் வளர்ச்சிக்காக பல முயற்சிகளில் ஈடுபட்டார். அவற்றில் முக்கியமாக, புதிய தமிழ்ப் பாடசாலைகளை ஆரம்பித்தமை, தமிழ் வாசிகசாலை தொடங்கியமை, தமிழ்ப் பத்திரிகை வெளியிட்டமை, தமிழை கணணி மயமாக்க மேற்கொண்ட முயற்சிகள் என்பன குறிப்பிடத்தக்கன.

திரு பொன் சத்தியநாதன் அவர்களின் இழப்பு அவுஸ்திரேலிய தமிழர்களுக்கு மட்டுமல்ல உலகத் தமிழர்களுக்கே ஏற்பட்ட ஒரு பேரிழப்பு என்றால் அது மிகையாகாது.

திரு பொன் சத்தியநாதன் அவர்களை இழந்து துயரப்படும் அவரது பாரியார், அவரது உடன் பிறப்புக்கள், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

ஈழத் தமிழ் சங்கம் - விக்டோரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கட டொக்ரர்!



தமிழருடன் தமிழிலே பேசுங்கள். தமிழை ஆங்கிலத்துடன் கலக்காது பேசுங்கள் எனச் சொல்லியும் அப்படியே வாழ்ந்தும் காட்டிய பெருமனிதன் கடந்த பத்தாண்டுகளாக ஒரு சொல்லையே உதிர்க்கமுடியாமல் படுத்த படுக்கையாக நீண்ட நோயில் வாடியது மிகவும் கொடிய துயரம்தான்.

உலகமானது தர்மத்தின் அடிப்படையில் சுழலவில்லை எனவும் தர்மம் தலை காக்கும் என்பதும் தோற்றுப்போனமைக்கு இரண்டு சாட்சியங்கள் என நான் நண்பர்களிடம் கூறுவதுண்டு.

ஒன்று " முள்ளிவாய்க்கால் மண்ணில் ஓர் இலட்சம் மக்கள் கொல்லப்பட்டுக்கொண்டிருந்தபோது எவருமே அவர்களைக் காப்பாற்ற முன்வராத அந்த இறுதி நாட்கள்

இரண்டு " தர்மம் செய்து வாழ்வதே தனது வாழ்நாள் பணியென வாழ்ந்து தனக்காக வாழாது பிறர்க்காகவே வாழ்ந்தும் தனது இறுதிக் காலத்தை கடினமாகவே கழித்த எங்கட டொக்ரின் இறுதி நாட்கள்.

ஆனாலும் அந்த தர்மங்கள் எப்போதுமே அழியா. அவை என்ன நோக்கத்திற்காக விதைக்கப்பட்டனவோ அவை அவற்றின் அறுவடையை நிச்சயம் பெறும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

யாரும் சாப்பாடு தேடி வீதியால் சென்றால் அவர்களுக்கு சமையலறையிலிருந்து யாருக்கும் தெரியாமல் எடுத்துச் சென்று வேலிக்குக் கீழால் சாப்பாட்டைக் கொடுப்பான் எங்கட பிள்ளை என டொக்ரரின் தாயார் அடிக்கடி சொல்லிப் பெருமைப்படுவார். அவரது தாயாரையும் தனது வீட்டில் வைத்துப் பராமரித்து ஒரு சிறுபிள்ளை போல தனது தாயாருடன் அவர் பழகும் விதம் கண்களைப் பனிக்கச் செய்யும்.

அவருக்குப் பிள்ளைகள் இல்லை ஆனால் தனது உறவினர்கள் எனவும் தமிழுக்காக எனவும் பத்துக்கு மேற்பட்டவர்களைப் படிப்பித்தார். அப்படித்தான் நானும் எனது நண்பர்கள் சிலருடன் சில ஆண்டுகள் அவரது வீட்டிலேயே வாழும் சந்தர்ப்பம் கிடைத்தது.

தமிழருடன் தமிழிலே பேசுங்கள். தமிழை ஆங்கிலத்துடன் கலக்காது பேசுங்கள் என சொல்லியும் அப்படியே வாழ்ந்தும் காட்டிய பெருமனிதனை நாம் அவரை "டொக்ரர்" என்றும் அவரது மனைவியை "அன்ரி" என்றும் அழைத்துக்கொண்டது முரண்தான். அவர் தன்னை மாமா என அழைக்குமாறு சொல்வார். ஆனால் டொக்ரர் என்பதே நிலைத்துப் போனமை இப்போதும் வியப்புத்தான்.

எப்போதுமே பிள்ளைகள் சாப்பிட்டாச்சோ, பிள்ளைகள் வந்திட்டினமோ என சிறுபிள்ளைகளை விசாரிப்பதுபோல கேட்டுக் கொண்டேயிருப்பார். இவரது கணனி சார் ஆய்வு முயற்சிகளை அறிந்து வன்னியிலிருந்து போராளிகள் தொடர்புகொண்டபோது மிகவும் புத்தூக்கம் அடைந்து தனது ஆய்வுப்பணிகளை முன்னெடுக்க விரைந்தார். அங்கு அவருக்கான ஆய்வுகூடம் அவரோடு சேர்ந்தியங்க போராளிகள் என பலதரப்பட்ட வசதிகள் தலைவர் வே. பிரபாகரனின் அறிவுறுத்தலின்படி வழங்கப்பட்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த அறையில் எந்தக் கணனி இருக்கவேண்டும் எந்த மேசை எங்கே இருக்கவேண்டும் என தனது சொந்த வீட்டிலும் மேலான நெருக்கத்துடன் அறிவுறுத்தல்களை வழங்குவார்.
அத்தகைய அவருடைய ஈடுபாடு எந்தளவுக்கு அவர் போராளிகளையும் அது தொடர்பான வேலைகளையும் தனது சொந்த விடயங்களாக அணுகினார் என்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

---

நோர்வேயின் முயற்சியோடு சமாதானம் தொடங்கிய தொடக்க காலம். ஒரு கன்ரெயினர் முழுமையாக கணனிகளும் தொழில்நுட்ப இயந்திரங்களும் என வந்திறங்கிய டொக்ரர் கிளிநொச்சியிலிருந்து விசுவமடு ஊடாக புதுக்குடியிருப்பு வந்திருந்தார்.தூசிகளால் போர்த்தியிருந்த அவரது தலை முகம் ஆடைகள் அனைத்தும் அவரது உழைப்பின் அர்ப்பணிப்பை எடுத்துச்சொல்லின.
அப்பிள் கணனிகள் உட்பட பல கணனிகளுடன் வந்திறங்கிய அவர் ஒரு பெட்டியை மட்டும் பத்திரமாக காவிக்கொண்டு வந்து தானே மேசையில் வைத்தார்.

எங்கட டொக்ரர் எங்களுக்கு பத்திரமாக அப்பிள் லப்ரொப் கொண்டுவந்திருக்கின்றார் என துள்ளிக் குதித்தார் ஒரு போராளி. எல்லோரது கண்களும் அந்த முக்கியமான பெட்டியை நோக்கிக் குவிந்தது. பெட்டியைத் திறந்தபோது பொருட்கள் உடையாமல் வைத்திருந்த பஞ்சுமெத்தைகளை கொஞ்சம் கொஞ்சமாக வெளியே எடுத்து உள்ளே இருந்த அந்த பொக்கிசத்தை வெளியே எடுத்தார்.
அது அந்த வெள்ளை வெளீரென்ற வள்ளுவர் சிலை!

தான் செல்லும் தமிழர் நிகழ்வுகள் எல்லாவற்றுக்கும் தமிழர் வீடுகள் எல்லாவற்றுக்கும் ஒரு வெள்ளை வெளீரென்ற வள்ளுவர் சிலை ஒன்றை எடுத்துச் செல்வார் டொக்ரர்.
பெருந்தொகையான நிதியில் அவற்றை மெல்பேர்ணில் ஒரு நிறுவனத்தின் ஊடாகச் செய்வித்து இலவசமாகவே ஒவ்வொரு வீட்டுக்கும் கொண்டுசேர்த்தார்.
அதனை சிறுபிள்ளையை இடுப்பில் காவிச் செல்வது போல கொண்டுசெல்வது இன்னமும் நினைவில் நிழலாடுகின்றது.

---

புலம்பெயர்ந்த நாடுகளில் தமது பிள்ளைகளுக்குத் தமிழ் கற்பிக்கவேண்டும் என்றும் தமிழில் கதைக்கவேண்டும் எனவும் அடிக்கடி வலியுறுத்துவார் டொக்ரர்.
தான் செல்லும் வீடுகளில் அங்குள்ள பிள்ளைகளுடன் தமிழில் கதைப்பார். அவர்கள் அதற்குப் பதில் சொல்லமுடியாமல் சங்கடப்படுவார்கள்."அவைக்கு தமிழ்ல கதைச்சா விளங்கும் ஆனா தமிழ்ல திருப்பிக் கதைக்கத் தெரியாது" என்பார்கள் பெற்றோர்கள்.
"ஓ எங்கட வீட்டு நாயும் இப்படித்தான், தமிழ் விளங்கும் ஆனா திருப்பிக் கதைக்காது." என சிரிக்காமற் சொல்வார் இவர்.

டொக்ரரைப் புரிந்தவர்கள், தெரிந்தவர்கள் அவரது கடுமையை அன்பாக ஏற்றுக்கொள்வார்கள். ஏனென்றால் அந்தக் கடுமைக்குள் அன்பான, நெருக்கமான ஒளிவு மறைவற்ற நெருக்கம் இருந்தது.

ஒரு வீட்டில் கணவன் மனைவி இருவருமே மருத்துவர்கள். இவர்களுடன் கணவனின் வயோதிப தாயார். மிகவும் கடுகதியான உலகில் அவர்களுக்கோ நேரம் இல்லை. ஆனால் கணவன் ஒருநாள் ஐந்து இளைஞர்களை வீட்டுக்கு அழைத்து வருகின்றார். இவர்கள் எமது பிள்ளைகள், இவர்களை இங்கு தங்கவைத்துப் படிப்பிக்க போகின்றேன் என மனைவிக்கு சொல்கின்றார். மனைவியோ அந்தப் புன்முறுவல் மாறாமல் அவர்களுக்குத் தனது கையாலே சமைத்துச் சாப்பாடு கொடுத்து சந்தோசமாகப் படிப்பிக்கின்றார்.
அவர்தான் எங்கட அன்ரி.
எங்கட டொக்ரர் மட்டுமல்ல அன்ரியும் டொக்ரர் பொன் தான்!

- கணேசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - ஒஸ்ரேலியா
**Tamils Rehabilitation Organisation-Australia**
*P O Box 4254, Knox City, Victoria 3152, Australia*
*Phone / Fax: + 61 3 9888 3899*

18ம் திகதி புரட்டாதி 2017

தமிழ் உணர்வாளர் மருத்துவர் பொன். சத்தியநாதன் அவர்களின் துயரமான மறைவுக்கு, ஒஸ்ரேலியா தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், தொண்டர்களும் எமது அஞ்சலிகளை செலுத்துகின்றோம்.

உலகலாவிய தமிழ் மக்கள் மனதில் நீங்காத நினைவுகள் பலவற்றை விட்டுச் சென்றுள்ள மருத்துவர் சத்தியநாதன் அவர்கள், எமது தொண்டர்களுடன் மட்டுமல்லாமல், தமிழ் சமூகத்தினருடன் மிகப்பெரிய அளவில் இருந்த அவரின் பங்களிப்புக்கள், அர்ப்பணிப்புக்கள் அடங்கிய அவரின் வாழ்க்கைக்காக, நாம் என்றும் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம்.

மருத்துவர் பொன். சத்தியநாதன் தமிழ் கலை, கலாச்சாரம், வள்ளுவம் மற்றும் தமிழ் மொழியை, ஒஸ்ரேலியாவிலும் மட்டுமல்லாது உலகம் முழுவதிலும் ஊக்குவிப்பதில் ஒரு கோபுரமாக திகழ்ந்தவர்.

தமிழ் மக்களின் நலனுக்காகவும், எம் மக்கள் சுதந்திரமான தாயகத்தில், சீரிய பண்புள்ள சமுதாயமாக வளரவேண்டும் என்ற அவரது தைரியமான நோக்கத்திலும், தீர்மானத்திலும் உறுதியாக தன்னலம் கருதாமல் பிறர் நலம் கருதி, வாழ்ந்து காட்டியவர்.

ஈழத்தில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களது பொருளாதார மற்றும் சமூக வாழ்க்கையை மேம்படுத்துவதன் நோக்கமாக மனிதாபிமான நடவடிக்கைகளுக்காக தனது இதயத்தையும், ஆன்மாவையும் என்றுமே தியாகம் செய்தவர் மருத்துவர் பொன்.சத்தியநாதன்.

மருத்துவர் பொன்.சத்தியநாதன் தனது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களிடையே குறிப்பாக "தமிழ் சமூகத்திலே" விதைத்து விட்டுச் சென்ற நல்-விதைகளான பல நல்லெண்ணங்களும், மக்கள் சேவையும் என்றும் எங்களிடையே நிலைத்து நிற்கும்.

அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை பகிர்ந்து கொண்டு, அவரது ஆன்மா நித்திய பேரின்பத்தை அடைவதாக...

இங்கணம்

வைத்திய கலாநிதி இராஜன் இராசையா,
நிர்வாக இயக்குனர்.
(தமிழர் புனர்வாழ்வுக்கழக (ஒஸ்ரேலியா) தொண்டர்கள் சார்பாக).

Australian Council For International Development

Tamils Rehabilitation Organisation is registered in Australia as *Tamils Rehabilitation Organisation (Australia) Ltd.* *and is a* ***Full member*** *of the* ***Australian Council For International Development.***

**ACN 063 019 189**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மருத்துவர் பொன் சத்தியநாதன் தமிழீழ மக்களால் ஒரு போராளியாகவே நினைவு கூரப்படுவார்

மருத்துவர் பொன்.சத்தியநாதன் அவர்கள் ஒரு தமிழீழ உணர்வாளர் என்று சொல்வது அவரைப்பற்றிய மிகக்குறைவான மதிப்பீடாகும். சத்தியநாதன் அவர்கள் ஒரு தமிழீழ விடுதலைப் போராளியாவார். நான் அறிந்தவரை அவர் நெஞ்சில் ஆழமாக வேர்கொண்டிருந்த உணர்வு தமிழீழ விடுதலை உணர்வேயாகும். ஆயுதம் ஒன்றின் மூலம் மட்டுமே தமிழீழ மக்கள் தங்கள் விடுதலையை சிங்கள இனவெறி ஆட்சியாளரோடு மோதிப் பெறமுடியும் என்பதில் அவர் ஆழமான நம்பிக்கைகொண்டிருந்தார். இது அவரிடம் காணப்பட்ட போர்வெறி அல்ல. போர்வெறி கொண்டிருந்த சிங்களவரிடம் இருந்து தமிழீழ மண்ணைக் காப்பதற்காக அவர்கொண்டிருந்த போர் நெறி என்பேன்.

ஈழத் தமிழர்கள் உள்ளடக்கிய உலகத் தமிழர்கள் அனைவரினதும் நலனைக் கருத்திற்கொண்டு பழ.நெடுமாறன் அவர்கள் தலைமையில் நாங்கள் உலகத் தமிழர் பேரமைப்பினை உருவாக்கினோம். தமிழ்நாட்டில் தன்னுடைய சொந்தப் பணத்தில் வாங்கி அவர் கட்டிய ஒரு புதிய மாடி வீட்டை உலகத் தமிழர் பேரவை தலைமை அலுவலகமாக பழ.நெடுமாறன் அவர்கள் கையில் ஒப்படைத்தார்.

தமிழ் மொழியிலும் இலக்கியத்திலும் ஆழமான பற்றும் ஈடுபாடும் கொண்டவர் பொன்.சத்தியநாதன் அவர்கள். தமிழ்ச் சொற்கள் உச்சரிப்பு முறைபற்றி அவர் செய்துகொண்டிருந்த ஓர் ஆய்வு பற்றி என்னோடு அவர் கலந்துரையாடியபோது தமிழில் இத்தனை ஆழமான புலமையா இவருக்கென்று நான் வியந்ததுண்டு. தமிழ் உச்சரிப்புக்குறித்த அவர் ஆய்வு அவர் கணனியில் பதிவாகி இருந்தது. சென்னையில் இதற்கென்று ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு கலந்தாய்வுக் கூட்டத்தில் இந்த உச்சரிப்பு முறைபற்றி அவர் விளக்கினார். அவருடைய ஆய்வு முழுவடிவில் வரவில்லை. அவர் கணினிப் பதிவு பாதுகாக்கப்படவேண்டும் நூல் வடிவாக்கப்பட வேண்டும். ஏன் எனில் தமிழ் உச்சரிப்புக் குறித்த ஆய்வு இதுவரை தமிழில் வெளிவந்ததேயில்லை.


மருத்துவர் பொன். சத்தியநாதன் அவர்கள் தன் வாழ்வில் தன்னைப்பற்றிக்கொஞ்சமும் விளம்பரம் செய்துகொள்ளாத ஒரு பெரிய கொடையாளியாக வாழ்ந்தார். இவர் தமிழீழ மக்களால் ஒரு போராளியாகவே நினைவு கூரப்படுவார். எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- காசி ஆனந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவர் பொன்.சத்தியநாதன்..
## வாழ்வார். வரலாற்றில்...



2000 ஆவது ஆண்டு என்னுடைய உறங்கா நிறங்கள் ஓவியக் காட்சி நடைபெற்று முடிந்த சில மாதங்களில் அண்ணன் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து வருகைதந்திருந்த மருத்துவர் பொன். சத்தியநாதன் அவர்களை எனக்கு அறிமுகம் செய்துவைத்தார். அதன் பிறகு அவர் எப்போதெல்லாம் தமிழகம் வருகிறாரோ அப்போதெல்லாம் அவரை சந்திப்பதும், தமிழ், தமிழீழம், விடுதலைப் போராட்டம், போராளிகள், தலைவர் பிரபாகரன் குறித்து அவரோடு நீண்ட நேரம் உரையாடுவதும் வழக்கமாயிற்று.

தமிழ் மீது அவருக்கு அளவற்ற பற்றும் ஈடுபாடும் இருந்தது. ஒரு மருத்துவராக இருந்தபோதிலும் தமிழ் மொழி குறித்து ஆய்வு நோக்கில் அதிகமாக சிந்தித்தார். மலையாள மொழியை சேரத் தமிழ் என்றே அவர் குறிப்பிடுவார். 2002 இல் அமெரிக்க, ஐரோப்பிய பயணம் முடித்து திரும்பிய பிறகு, சென்னையில் என்னை சந்தித்த அவர், ஆஸ்த்திரேலியாவிற்கும் நீங்கள் வரவேண்டும் என்று அழைத்தார். சமாதான காலத்திற்குப் பிறகு முதலில் தமிழீழம் சென்று பிறகுதான் தமிழகம் வருவார். 2004 ஆம் ஆண்டு நான் தமிழீழத்திற்கு சென்று, தலைவர் பிரபாகரன் அவர்களை சந்தித்து திரும்பிய பிறகு, தமிழகம் வந்த மருத்துவர் பொன். சத்தியநாதன் அவர்கள் இந்த ஆண்டு மாவீரர் நாளுக்கு ஆஸ்த்திரேலியாவிற்கு வாருங்கள் என்று அழைப்பு விடுத்தார். அங்கு சென்ற போதுதான் "எரியும் வண்ணங்கள்" "உறங்கா நிறங்கள்" தொகுப்புகளில் இருந்த தமிழீழ விடுதலை சார்ந்த 27 ஓவியங்களை தனியாகப் பிரித்து "புயலின் நிறங்கள்" என்றத் தலைப்பில் காட்சிப்படுத்தினோம். அதற்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்தவர் மருத்துவர் பொன்.சத்தியநாதன் அவர்கள்தான். ஆஸ்த்திரேலியா சென்ற பிறகுதான் அவர் எப்படிப்பட்ட செயற்பாட்டாளர் என்பதை இன்னும் கூடுதலாக அறிந்துகொள்ள முடிந்தது. அவர் இல்லமே தமிழ்ச்செயற்பாட்டாளர்களால் நிறைந்திருந்தது. களத்தில் விழுப்புண் அடைந்து, மேலும் களத்தில் நின்று போராட முடியாத போராளிகளை வெவ்வேறு துறைகளில் வளர்த்தெடுத்தார் தலைவர். அது தமிழீழ நாட்டிற்கு பயன்படும் என்று தலைவர் சிந்தித்தார். அந்த சிந்தனைக்கு உயிர் கொடுத்து செயல் வடிவம் கொடுப்பவராக மருத்துவர் பொன்.சத்தியநாதன் இருந்தார் என்பதை அறிந்து வியந்தேன். மருத்துவராக சம்பாதிக்கும் வருவாயை தமிழீழ விடுதலை செயற்பாட்டிற்கு செலவு செய்பவராக இருந்தார். அவர் மனைவி அதற்கு மிகவும் துணையாக இருந்தார். அவர் இல்லத்தில் நான் தங்கியிருந்த பத்து நாட்களும் எனக்கு மிகப் பெரிய அனுபவமாக இருந்தது.

தமிழீழத் தேசியத்தலைவர் அண்ணன் பிரபாகரன் அவர்களின் நேரடித் தொடர்புடைய மருத்துவராகவும், புலிகள் அமைப்பின் மருத்துவ ஆலோசகராகவும், கிளிநொச்சி தமிழீழ மருத்துவமனை நிறுவியவர்களில் ஒருவராகவும் இருந்தார். மருத்துவ மனைக்குத் தேவையான அனைத்து வெளிநாட்டு நவீன கருவிகளையும் தமிழீழத்திற்கு கொண்டுவந்தவர் அவர். இதை நான் பின் வந்த ஆண்டுகளில் தமிழீழம் சென்றபோது அறிந்துகொண்டேன். பொன்.சத்தியநாதன் அவர்கள் ஈழத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவன உறுப்பினராகவும், அவ் அமைப்பின் தலைவராகவும் இருந்து ஈழத் தமிழ் சங்கத்தின் செயற்பாடுகளுக்கும் துணை நின்றிருக்கிறார். மெல்போர்னில் தமிழ்ப் பாடசாலைகள் தொடங்கி நடத்துவதில் முன்னோடியாக செயற்பட்டு வந்த அவர், புலம்பெயர் தேசங்களில் தமிழ்க் கல்வி கற்பிக்கும் முறைமையை வடிவமைப்பதில் முன்னோடியாகவும் விளங்கினார். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் ஆஸ்த்திரேலிய மருத்துவ நிதியம் ஆகியவற்றின் செயல்பாடுகளுக்கு முதுகெலும்பாக செயற்பட்டார். ஆஸ்த்திரேலியாவில் உள்ள பல தமிழ் அமைப்புகளோடும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமைகளோடும் நல்ல உறவோடிருந்தார். என்னை பல்வேறு நிகழ்வுகளுக்கு அழைத்துச் சென்று உரையாற்ற வைத்தார். சந்திப்புகளுக்கும் ஏற்பாடு செய்தார். நான் அங்கு சென்றிருந்த போது, தமிழில் ஒலியை தட்டச்சாக்கும் தொழில்நுட்பத்தினை கண்டறிவதற்கான ஆய்வில் ஈடுபட்டிருப்பதாகக் என்னிடம் கூறினார். அடிக்கடி என்னிடம் அதுகுறித்து பேசுவார். ஆனால் அதை இறுதி செய்வதற்கு முன்பாகவே, அடுத்த ஓரிரு ஆண்டுகளில் அவர் உடல் நிலை பாதிக்கப் பட்டு செயல்பட முடியா நிலைக்குத் தள்ளப்பட்டார். அது மிகப் பெரிய இழப்பாகும்.
அய்யா பழ. நெடுமாறன் அவர்களின் தலைமையில் இயங்கிய உலகத் தமிழர் பேரமைப்பு துணைத் தலைவர்களுள் ஒருவராக இருந்தார். அப்போது நானும் அவ்வமைப்பில் தீவிரமாக செயலாற்றினேன். சென்னையில் உள்ள உலகத் தமிழர் அலுவலகக் கட்டிடத்தை அவர்தான் வழங்கினார்.
தமிழ், தமிழீழ விடுதலை செயற்பாடுகளில் பங்களித்த பலரை நாம் இழந்துவிட்டோம். இப்போது மருத்துவர் பொன்.சத்தியநாதன். ஆனால் தமிழீழ விடுதலை வரலாற்றில் அவர் பெயர் நிலைத்து நிற்கும். அவரால் உருவாக்கப் பட்டவர்கள், பலர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அதனால் அவரும் வாழ்வார். வரலாற்றில்...

- ஓவியர் புகழேந்தி

---




தமிழகத் திரைப்படக் கலைஞர் திரு. சிவகுமார் அவர்கள் மருத்துவர் பொன் சத்தியநாதனின் அன்புக்குப் பாத்திரமானவர். மருத்துவர் தமிழகம் செல்லும்போது சிவகுமார் அவர்களின் வீட்டுக்கும் சென்று வருவதுண்டு. மருத்துவரின் மறைவுச் செய்தியறிந்து தனது ஆழ்ந்த இரங்கலை திரு. சிவகுமார் அவர்கள் வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்ப வைத்தியரின் குழந்தை உள்ளம்



"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

என்னும் பாரதியார் வாக்கிற்கிணங்க அதனை அவுஸ்திரேலியா வாழ் தமிழினமும் பின்பற்றி வாழவேண்டும் என்னும் பேராவலுடன் தமிழ்மொழி வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த மாபெரும் மகான் மருத்துவ கலாநிதி பொன் சத்தியநாதன் அவர்களின் மறைவு அவுஸ்திரேலியாவில் வாழும் எமக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும் என்பதனை நாம் நன்கு அறிவோம். தமிழினத்திலும் தாய்மொழியிலும் மிகவும் பற்றுக்கொண்டு அதனை வளர்ப்பதற்காக மிகவும் சிரமப்பட்டு மெல்பேர்ண் நகரின் அரும்பெருந் தமிழ் நூல்களைக் கொண்ட நூல் நிலையத்தை உருவாக்கினார். தமிழ் மாணவர்கள் தமிழைக் கற்கவேண்டும் என்ற பெருவிருப்புடன் தமிழ்ப் பாடசாலைகளையும் தொடங்கி வைத்தார். கணனி வழியாகவும் தமிழை வளர்த்து உருவாக்கவேண்டும் என தளராது உழைத்த உத்தமனாவார். உலகப் பொதுமறையாம் திருக்குறளை யாவரும் படித்துப் பயன்பெறும் வண்ணமாக திருவள்ளுவர் சிலைகளைச் செய்து வீடுகளிலும், பொது நிறுவனங்களிலும் வைக்கச் செய்து மகிழ்வுற்ற வள்ளலும் இவரேயாவார்.

பல்லாண்டுகளாக எமது குடும்ப வைத்தியராக இருந்த அவர் பழகிய விதமே தனியானது. நோயுற்று மனச்சோர்வுடன் நோயாளியாக நாம் போகும்போது கூட இன்முகத்துடன் வரவேற்று தனது குடும்ப உறுப்பினர்களாகவே நேசித்து மருத்துவ ஆலோசனைகள் வழங்கிய அன்பும் பண்பும் நிறைந்த மருத்தவர் அவர். நாம் அவர் கூறிய மருத்துவ ஆலோசனைகளை மீறி நடந்துகொண்டால் உரிமையுடன் எம்மைக் கடிந்துகொண்ட முறையும் ரசனைக்குரியதாகும்.

எமது பிள்ளைகளை மருத்துவச் சிகிச்சைக்காக அவரிடம் அழைத்துச் செல்லும் சந்தர்ப்பங்களில் குழந்தைகள் மழலை மொழியில் தமிழில் உரையாடுவதைக் கண்டு முகமலர்ந்து, மனம் மகிழ்ந்து அவர்களைத் தட்டிக்கொடுப்பதுடன் அவர்களின் உச்சரிப்புக்களைக்கூட எவ்வாறு உச்சரிக்கவேண்டும் எனத் திருத்தம் செய்வார். தமது பிள்ளைகளைத் தமிழில் பேசவைக்கவேண்டும் என பெற்றோரை வலியுறுத்தி அன்புடன் அறிவுரை வழங்குவார். எதிர்காலத்தில் தமிழ்மொழி அவுஸ்திரேலியா மண்ணில் அழிந்துவிடக் கூடாது என்ற பெரு நோக்குடன் எதிர்கால சந்ததியினரும் தமிழைக் கற்றுத் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என முழுமூச்சுடன் அயராது உழைத்தவரை மறக்காமல், அவர் வழியில் நின்று தமிழ் மொழி வளர்ச்சிக்காகப் பாடுபடுவதே நாம் அவருக்குச் செய்யும் மரியாதையாகும்.

பற்பல நாடுகளுக்குச் சென்று வந்த சந்தர்ப்பங்களில் அங்கு நடந்த சுவையான சம்பவங்களை நகைச்சுவையுடன் கூறி எம்மையும் சிரிக்க வைப்பார். அப்படி அவர் பகிர்ந்த ஒரு சம்பவத்தை இங்கு நினைவூட்ட விரும்புகிறேன். அவர் ஒருமுறை இந்தியாவிற்குச் சென்றபோது உணவகம் ஒன்றின் முன்னால் வைக்கப்பட்டிருந்த விளம்பரப் பலகையில் " இங்கு புல் சாப்பாடு கிடைக்கும்" என்று எழுதப்பட்டிருப்பதைக் கண்டு தான் வேதனையடைந்து உணவகத்தினுள் சென்று உரிமையாளரிடம் நீங்கள் ஆடு மாடுகளுக்கா சாப்பாடு போடுகிறீர்கள்? என்று கேட்டாராம். தமிழையும் ஆங்கிலத்தையும் கலந்து ஆங்கிலச் சொற்களை தமிழில் எழுதி தமிழைக் கொச்சைப்படுத்துகிறார்கள் என்று மனவேதனையுடன் கூறியது இன்றும் என் நினைவில் இருக்கின்றது.

அன்பும் பண்பும் நல்லிதயமும் கொண்ட மருத்தவரின் வாழ்விலேயே விதி சதிசெய்து எம் அனைவரையும் மனம்கலங்கச் செய்துவிட்டது. "அறன் எனப்பட்டதே இல் வாழ்க்கை" என்பதற்கமையவே இவரும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைவியும் இணைந்து வாழ்ந்து காட்டினர். அவரின் வாழ்க்கைத்துணை மருத்துவர் நளாயினி அவர்களும் மக்களின் பெருமதிப்புக்குரிய சேவையாளர். மருத்துவர் சத்தியநாதன் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த காலப்பகுதியில் தனது சொத்துக்கள் அனைத்தையும் விற்று உயர் ரக பராமரிப்பில் வைத்து அன்போடும் பொறுப்போடும் தனி ஒருவராகப் பராமரித்த நளாயினியின் தியாகத்தையும் இந்த நேரத்தில் நான் நினைத்துப்பார்க்கிறேன்.

மருத்துவர் பொன்.சத்தியநாதனின் மரணம் எம்மைச் சொல்லொணாத் துயருள் ஆழ்த்துகின்றது. அவரின் ஆத்மா சாந்தியடைய மனமார பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அன்னாரின் பூதவுடல் அழிந்திடினும் அவரின் புகழுடம்பு உலகம் உள்ளவரை ஓங்குக!

-சுகந்தி ஞானகாந்தன்

பொன். சிவகுமாரன் சயனைட் உட்கொண்டு மயங்கிய நிலையில் காவற்றுறையால் கொண்டுவரப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டுக்கொண்டிருந்தார். அப்போது நினைவின்றி காவற்றுறைக் காவலோடிருந்த சிவகுமாரனை தமிழகத்துக்குக் கடத்திப்போய் சிகிச்சையளித்துக் காப்பாற்ற போராளிகள் தீட்டிய திட்டத்துக்கு சத்தியநாதன் அவர்கள் உதவிசெய்தார். ஆனால் கடத்திப்போகத் திட்டமிட்டிருந்த இரவு வரமுன்பேயே சிவகுமாரன் வைத்தியசாலையில் சாவைத் தழுவிக்கொண்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொடைவள்ளல் சத்தியநாதன்**

அண்ணா சத்தியநாதன் அவர்களின் இறப்புச் செய்தி அறிந்ததிலிருந்து மிகுந்த மனவேதனையுடன் இருக்கின்றேன். இவரைப் போன்ற ஒரு மாமனி-தரை இந்தத் தமிழ் உலகம் பெற்றது வியப்பாக இருக்கின்றது.
எனக்கும் அவருக்குமான உறவு தமிழால் ஏற்பட்டது. அவருடன் நான் பழகிய நாட்கள், அவர் எனக்குச் செய்த மாபெரும் வள்ளல் தன்மை இவை எல்லாவற்றையும் நான் நினைத்துப்பார்க்கிறேன்.

1997 ஆம் ஆண்டு "உலகம் பரவிய தமிழின் வேர் கல் " பகுதி 1" என்று ஒரு நூலினை இலண்டனில் உள்ள ஈழத்தமிழர் ஒருவரின் பொருளுதவ-ியுடன் நான் வெளியிட்டிருந்தேன். சத்தியநாதன் அண்ணா தமிழகம் வந்திருந்தபோது எனது மாமனார் ஈழவேந்தன் அவர்கள் எனது வீட்டுக்கு அழைத்துவந்தார்கள். அவரிடம் எனது நூலைக் கையளித்தேன். அந்த நூலைப் படித்துப் பார்த்த மறுநொடியே இந்நூலின் மற்றைய பாகங்கள் தொடர்பாகக் கேட்டறிந்தவர், அவற்றை வெளியிடுவதற்கு பொருட்செலவை தான் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தார். இதற்கு அதிகமாகப் பணம் செலவாகும் இதை தாங்கள் செய்யவேண்டாம் என்று நான் மறுத்தபோது "எனக்கு இந்த வாய்ப்பினைக் கொடுங்கள். என்னிடம் பணம் இருக்கிறது, இதற்குப் பயன்படட்டுமே" என்றார்.

மிகுதிப் பாகங்கள் என்னும் முடிவுறாத நிலையில் இருப்பதைத் தெரியப்படுத்தியபோது "நீங்கள் எப்போது முடித்தாலும் நான்தான் வெளியிடவேண்டும்" என அன்புக் கட்டளை இட்டார். நூல்களை எழுதி முடிப்பதற்கு எனக்கு எட்டுமாதங்கள்ஆகிவிட்டன. அவ் இடைப்பட்ட காலத்தில் அவுஸ்திரேலியாவிலிருந்து பலமுறை என்னை அழைத்து புத்தகத்தின் நிலை என்ன? பணம் எப்போது அனுப்பவேண்டும் எனக் கேட்டுக்கொண்டே இருந்தார்.

அந்த நூல்களை அச்சிடுவதற்கு இற்றைக்கு 17 ஆண்டுகளுக்கு முன்பு 2000ஆம் ஆண்டில் இரண்டு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரம் இந்திய ரூபாய்கள் செலவாகின. அண்ணா சத்தியநாதன் அவர்கள் எனக்கு மூன்று இலட்சம் இந்திய ரூபாய் அனுப்பி வைத்தார்.
வைகோ தலைமையில் அண்ணா நூல் நிலையத்தில் நடைபெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வில் உலகம் பரவிய தமிழின் வேர் கல் - 02,03,04 மற்றும் தமிழ் கப்பல், தமிழ் அறிவோம் ஆகிய நூல்களை அண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சத்தியநாதன் அவருடைய துணையுடன் வெளியிட்டோம். அண்ணா சத்தியநாதன் அவர்களும் அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்திருந்தார். பலபேர் என்னுடைய மொழி ஆய்வுப் பணியைப்பாராட்டி உதவி செய்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அந்தச் சொல்லில் நின்றதில்லை. ஆனால் அண்ணா வலிந்து வந்து என்னை அடையாளம் கண்டு எனக்கு அந்த வாய்ப்பினைக் கொடுத்தார். இன்றைய மதிப்பில் அவர் செய்த உதவியின் பணமதிப்பு 25 இலட்சம். ஒரு தனிமனிதன் முன்பின் தெரியாத ஒரு தமிழ் ஆய்வாளனுக்கு அந்த ஆய்வின் அருமைகருதி அந்த அளவுக்கு உதவி செய்தார்.

2003இல் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களையும் தளபதிகளையும் சந்திப்பதற்கான ஏற்பாட்டினையும் சத்தியநாதன் அண்ணா அவர்கள் செய்து தந்திருந்தார். அத்துடன் கிளிநொச்சியில் எனது நூல்களை அறிமுகம் செய்துவைப்பதற்காக ஒரு பெரிய நிகழ்வையும் ஏற்பாடு செய்து தந்தார். சத்தியநாதன் அண்ணா அவர்களின் புகழ் தமிழீழ வரலாற்றில் சிறந்த அத்தியாயத்துக்கு உரியது என்பதை அனைவரும் அறிவார்கள். மண்ணில் அது பதிக்கப்படும். அவரின் கனவை நிறைவேற்றுவது தான் அவருக்கு நாம் செய்யும் அகவணக்கம்.

-முனைவர் கு.அரசேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"உலகத்தமிழர் பேரமைப்பு"க்காக தமிழ்நாட்டில் மரு.பொன். சத்தியநாதன் அவர்கள் வாங்கிக் கொடுத்த கட்டடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம் தேடா தமிழ் வள்ளல்



திரு சத்தியநாதன் அவர்களுடன் பழகுகின்ற பாக்கியம் கிடைத்தவர்களில் நானும் ஒருவன் என்ற வகையில், அவருடைய சரித்திரம் என்பது அவுஸ்திரேலியத் தமிழ் மக்களுடைய சரித்திரத்தோடு ஒன்றிணைந்த ஒன்றாகவே கருதப்பட வேண்டும். 80களின் நடுப்பகுதியிலிருந்து அவருடைய அர்ப்பணமான வாழ்வு தமிழ்ச் சமூகத்தோடு ஒன்றிணைந்தது. அவருடைய வாழ்வு அவருடை சேவை, அவருடைய அர்ப்பணிப்பு என்பவற்றை இரண்டு வகையாகக் கொள்ளலாம்.

பொதுவாக அனைவரும் அறிந்த அவருடைய தமிழுணர்வு, பாடசாலைகள் பற்றிய அவருடைய அக்கறை, பத்திரிகையில் அவரின் பங்களிப்பு, இலக்கியம் பற்றிய அவரது சிந்தனை, சமூக சேவை சார்ந்த அவரது செயற்பாடுகள் என்பன எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகவே இருக்கிறது. மெல்பேர்ண் மட்டுமல்ல அவுஸ்திரேலியாவையும் தாண்டித் தாயகத்திலிருந்து அவருடைய செயற்பாடுகளை மக்கள் அறிந்தே வைத்திருந்தனர்.

ஆனால் அவரைப்பற்றிய தெரியாத ஒரு முகமும் இருந்தது என்றுதான் சொல்லவேண்டும். காரணம் விளம்பரங்களை விரும்பாமல் தமிழ் மக்களுக்கான பணியை அவர் ஆற்றியிருந்தார். அந்த வகையில் மற்றவர்களுக்குத் தெரியாத பல அர்ப்பணிப்புக்களை, பல சேவைகளை தமிழ்மக்களுக்குச் செய்திருந்தார். குறிப்பாக தாயகத்திலும், அவுஸ்திரேலியாவிலும் தமிழை ஒலிவடிவமாகமாற்றி மக்களிடம் கொண்டு செல்லவேண்டும் என்பதற்காக ஆடீடீளு மருத்துவராக இருந்தபோதிலும் கணினித் துறையில் மிகப்பெரிய ஆர்வத்தைக் காட்டி, கணினிப் பட்டம் படித்து வீட்டில் ஓர் ஆய்வுக் கூடத்தை ஏற்படுத்தி ஆராய்ச்சிகளைச் செய்துகொண்டு வந்தார். அது இறுதிக் கட்டத்தை அடையவில்லையென்றாலும் அந்தக்காலத்தில் அது ஒரு முன்னோடியான ஆராய்ச்சியாகவே இருந்தது. அந்த ஆய்வானது தமிழ்தொடர்பான மற்ற ஆய்வுகளுக்கு அடிகோலியது என்றுதான் சொல்லவேண்டும். அதைவிட தாயகத்தில் பொருளாதாரத் தடையிருந்த காலத்தில் விஞ்ஞான உபகரணங்களை அங்கே கொண்டு சென்று பெரும்பங்கு ஆற்றியிருக்கிறார். அதைவிட டீரசநுழுழனல் அமைந்துள்ள தமிழ் தகவல் மையத்தைத் தொடங்கியதிலிருந்து அதைப் பராமரிப்பது வரைஅவருடைய பெரும்பங்களிப்பு இருந்தது.

பொன் சத்தியநாதன் அவர்கள் ஓர் இலட்சிய மனிதர். அவருடைய பயணம் இலட்சியம் சார்ந்தாகவே இருந்தது. எப்போதுமே மக்களுக்காகவே வாழவேண்டும் என்ற சிந்தனையுடைய அவர் தனக்குப் பிள்ளைகள் இல்லாதபோதும் தமிழர்கள் அனைவரையும் தனது மக்களாகவே பார்த்தார். தமிழர்கள் மொழியால் ஒன்றுபடவேண்டும் என்பது அவருடை குணாதிசயமாக இருந்தது. வள்ளுவமே தனது மதமாக வாழ்ந்தவர். சமூகம் சார்ந்த குணாதிசயம் கொண்ட அவர் மற்றவர்களும் அவ்வழியே இருக்கவேண்டும் என்ற அவாவோடிருந்தார்.

பொன் சத்தியநாதன் அவர்களின் வள்ளல் தன்மையை இங்கே குறிப்பிட்டே ஆகவேண்டும். தனக்கு என்று வாழாமல் பிறருக்காக வாழ்ந்த மகான் அவர். அவருடைய உழைப்பை தமிழினத்தின் பிழைப்புக்காக ஒப்படைத்தவர். அப்படியான அந்த மகான், போராளி, நாட்டுப்பற்றாளர் மரணத்துக்குள் மரணிப்பவர் அல்லர். அவர் எங்கள் மனங்களில் என்றென்றும் நிலைத்து நிற்பார் என்பதே உண்மையாகும்.

ஆறுமுகம் ரஜீவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டொக்டர் பொன்



அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு
அதிகாரம்:-1 குறள்:-1
சூரியன் (பகவன்) இவ்வுலக தோற்றத்திற்கு முதல்வனானவன். அவ்வாறே அகரத்தை முதலாகக்கொண்ட நம் தமிழ், மொழிகளுக்கெல்லம் ஆதியானது. இது மருத்துவக் கலாநிதி பொன் சத்தியநாதன் அவர்களின் திருக்குறட் பொழிப்புரை. சாதி, மதம் கடந்து தமிழைப் பேணிப் பாதுகாக்க, வளர்த்தெடுக்க, வாழவைக்க பாடுபட்ட தமிழ்ப்பற்றாளன்.

தமிழீழத்தின் விடிவு மட்டும் தான் தமிழ் மக்களினதும் தமிழினதும் வாழ்விற்கான அடித்தளம் என உறுதியாக நம்பியதோடு மட்டுமன்றி, ஈழத்தின் மீட்சிக்காக தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்தவர்.
அவரது ஈழவிடுதலைக்கான பயணம் அறுபதுகளின் பிற்பட்ட காலப்பகுதிகளில் ஆரம்பமானது. அரசியல் வாதிகளின் கைகளில் இருந்த போராட்டம் மாணவர்களின் கைகளுக்கு மாறிய பொழுது மாணவர் எழுச்சிகள், போராட்டங்கள், ஆர்பாட்டங்கள் என்பவற்றில் கலந்து கொண்டு சிங்கள அரசிற்கு எதிரான தனது எதிர்பை வெளிக்காட்டினார். எழுபதுகளில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மாணவர் பேரவையின் உறுப்பினராக அங்கம் வகித்தது மட்டுமன்றி அவ்வமைப்பின் கொழும்புக் கிளையின் அமைப்பாளராகவும் செயற்பட்டிருந்தார்.

சிங்கள அரசின் தமிழின விரோதச் செயற்பாடுகளை விளக்கும் விழிப்புணர்வு நாடகம் ஒன்றை நடத்தியதற்காக சிங்கள அரசின் புலன் விசாரணைப்பிரிவினால் அழைத்துச் செல்லப்பட்டு 4ஆம் மாடியில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட சம்பவமும் இவரது போராட்ட வழித்தடத்தில் ஓர் அங்கம் ஆகும். ஆனால் கொள்கைப்பிடிப்பை யாருக்காகவும் எதற்காகவும் விட்டுக்கொடுக்காத இலட்சியவாதியை, எந்தத் தடங்கல்களும் தடுத்து நிறுத்த முடியவில்லை.
தமிழின விடுதலைப்போராட்டத்திற்கான பங்கு மட்டுமன்றி மருத்துவத்திற்கும் தனது சேவையை ஆற்றினாரென்பதற்கு, வடபகுதியில் மருத்துவபீடம் உருவாகுவதற்கும் அதன் வளர்ச்சிக்கும் பாடுபட்டவர்களில் இவரும் ஒருவராகத் திகழ்ந்தார் என்பதே சான்று.
இவர் தமிழினத்திற்கு ஆற்றிக்கொண்டிருந்த தன்னிகரில்லாச் சேவையினால், தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் கட்டாயமாக சந்தித்துக் கலந்துரையாடவேண்டியவர்கள் எனும் பட்டியலில் முக்கியமானவராக இருந்தார்.

சிறுவயதில் இருந்தே மற்றவர்களுக்காக இரக்கப்படுபவர் என்பதற்கும் அவர்களிற்காக தன் சுய விருப்பு வெறுப்புகளை விட்டுக்கொடுக்கக் கூடிய தன்மையும் கொண்டவர் என்பதற்கும் சிறு உதாரணத்தைக் கூறலாம். அவரது பாலகப்பருவத்தில் சிலசமயங்களில் உணவுத்தட்டுடன் சத்தி காணாமல் போவதை இவரது தாயார் அவதானிப்பதுண்டு. ஒருநாள் பின்தொடர்ந்து அவதானித்தபொழுது வீட்டிற்கருகில் இருந்த ஏழைப்பாலகனிற்கு வேலி இடைவெளியின் ஊடாக உணவுத்தட்டைக் கொடுத்து விட்டு அவன் உண்டு முடியும் வரை காத்திருந்து அத்தட்டை வாங்கிவரும் வழக்கம் இருந்து வந்தது என அவரது தமக்கையார் நினைவு கூறுவதுண்டு.
அவரின் தமிழ் மீதான பற்றுறுதியின் முன் எவரும் நிலைகொள்ள முடியாதென்பது யாவரும் அறிந்ததே. எவரின் முன் இருந்தாலும் தன் நிலைப்பாட்டை எடுத்துரைக்க சிறுகணமேனும் தயங்கா மனதுடையவர். கொள்கைப்பற்றாளன், தமிழினத்தூண் இன்று சாய்ந்து இருப்பது கண்டு தமிழினமே கலங்கி நிற்கின்றது.

-கௌரிசங்கர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருமகனாரின் பெருங்கனவு!



தமிழ் என்ற மூன்றெழுத்தைச் சுற்றியே எங்கள் டொக்ரரின் கனவுகளெல்லாம் சுழன்றுகொண்டிருந்தன. தமிழ் வாழ, தமிழினம் நிமிர என்ன செய்யவேண்டும் என்பதையே நித்தம் சிந்தித்துக்கொண்டிருப்பார்.

உலகில் அனைத்துப் பாகங்களிலும் வெற்றிகரமாக செயற்பட்டுக்கொண்டிருக்கும் அரேபிய வைப்பகங்கள்போல் தமிழர்களுக்காக "உலகத் தமிழர் வைப்பகம்" ஒன்று உருவாக்க வேண்டும் என்பது அவர் பெருங்கனவுகளில் ஒன்றாக இருந்தது.

எங்கள் டொக்ரர் தனியே கனவில் வாழும் மனிதர் இல்லை என்பது அவரை அறிந்த அனைவரும் அறிந்த ஒன்று. அதேபோல்தான் தனது கனவுத் திட்டத்துக்கு செயல்வடிவம் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார். தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களிடமும் இந்த விடயத்தைத் தெரிவித்து ஒப்புதல் பெற்றதுடன், இத்திட்டத்தை உலகத் தமிழர் பேரமைப்புக்குள்ளால் தன்னால் செயற்படுத்த முடியும் என்ற உறுதிமொழியையும் தலைவருக்குக் கொடுத்தார்.

தமிழீழத்தில் வெற்றிகரமாக இயங்கிக்கொண்டிருந்த தமிழீழ வைப்பகத்தின் செயற்பாடுகள் தொடர்பாக உரியவர்களிடம் கேட்டறிந்த டொக்ரர் அவர்கள் உலகத் தமிழர் பேரமைப்பின் செயற்றிட்டங்களில் ஒன்றாக உலகத் தமிழர் வைப்பகத்தை உருவாக்கும் திட்டத்தை முன்மொழிந்து ஒப்புதல் பெற்று அதற்கான ஆரம்பகட்டப் பணிகள் தொடங்கப்பட்டிருந்தன.

இந்த வங்கியின் தேவைகுறித்து அவரிடம் வினவியபோது ஒவ்வொரு வங்கியினதும் இலாபக் கணக்கை விரிவாக விபரித்தவர், இந்த "உலகத் தமிழர் வைப்பகத்தில்" தமிழர்கள் அனைவரையும் வங்கிச் செயற்பாடுகளை மேற்கொள்ளச் செய்வதன்மூலம் பெரும் இலாபம் அடைய முடியும் என்பதையும் அந்த இலாபத்தை நாம் திரும்ப தமிழர்களிடமே கொண்டு சேர்க்க முடியும் என்றார். அத்துடன் உலகத் தமிழர்கள் இவ்வங்கியைப் பயன்படுத்துவதன்மூலம் எங்களுக்குள் இது ஒரு பலமான உறவுப்பாலமாகவும் இருக்கும் என்றார்.

இன்று புலம்பெயர்ந்த நாடுகளிலும் சரி, தாயகத்திலும் சரி தமிழர்கள் பிள்ளைகள் பெற்றுக்கொள்ளும் எண்ணிக்கையைக் குறைத்துவிட்டார்கள் என்பது டொக்ரரை கவலைகொள்ளச் செய்திருந்தது. குழந்தைகளின் எண்ணிக்கையைக் கூட்டுவதற்கு தமிழர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், தாயகத்தில் ஐந்து பிள்ளைகளுக்கு மேல் பெற்றால் அந்தக் குழந்தை படித்து முடியும்வரையான செலவை நாங்கள் பொறுப்பேற்கவேண்டும் என்பார். இப்படியான செயற்பாடுகளுக்கு பணம் தேவைப்படும்போது வைப்பகத்தின்மூலம் கிடைக்கும் இலாபத்தின் ஒருபகுதியைப் பயன்படுத்தலாம் என்பது அவரின் திட்டமாக இருந்தது.

அவர் தொடங்கிய திட்டங்களைத் தொடர இன்று டொக்ரர் எங்களுடன் இல்லை. ஆனால் அவரால் உருவாக்கப்பட்ட பலர் உள்ளார்கள் அவரின் கனவுகளின் சிதறல்களையாவது நிறைவேற்றுவதற்கு.

"சத்திய இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களைச் சாவு என்றும் அழித்து விடுவதில்லை. சரித்திர நாயகர்களாக எம் தேசத்தின் ஆன்மாவில் அவர்கள் என்றும் வாழ்வார்கள்" என்பார் தேசியத் தலைவர். எங்கள் டொக்ரர் அவர்களும் சத்திய இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர், அவரும் சரித்திர நாயகனாக எம் தேசத்தின் ஆன்மாவில் என்றும் வாழ்வார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலையார்வப் பொன்

திரு.பொன் சத்தியநாதன் அவர்களின் கலையார்வமும் கலைத்திறனும் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய ஆளுமைகள். இயல்பாகவே அன்றாட வாழ்வில் அவருக்கிருந்த எள்ளல் குறித்து அவருடன் பழகிய அனைவரும் நன்கறிவர். இந்த எள்ளல் குணமும் சேர்ந்து அவரது கலைப்படைப்புக்களில் வெளிவரும். அவர் கொழும்பில் மருத்துவம் படித்துக்கொண்டிருந்த காலத்தில் அவரும் அவரது நண்பர் ஒருவரும் இணைந்து "பயணம்" என்றொரு நாடகத்தைத் தயாரித்திருந்தனர்.

இந்நாடகம் குறித்து சிறிமாவோ அரசுக்கு விசுவாசமாக இருந்த தமிழர் ஒருவரால் காவல்துறைக்குத் தெரியப்படுத்தப்பட்டது. ஒருநாள் காவல்துறை வந்து நாடகப்பிரதியைக் கைப்பற்றிச் சென்றுவிட்டது. அதன்பின்னர் கோவை மகேசன் ஊடாக முயன்று நாடகப்பிரதியை மீளப்பெற்றுக்கொண்டாலும் அதில் ஏராளமான தணிக்கைகளை காவல்துறை செய்திருந்தது. அந்தத் தணிக்கைகளை மேற்கொண்டுமட்டுமே நாடகம் போடலாமென்று அறிவுறுத்தப்பட்டது.




அந்த நிபந்தனைக்கு இணங்கி தணிக்கைக்குட்படுத்தப்பட்ட நாடகப்பிரதியை வாங்கி வந்த பொன். சத்தியநாதன் அவர்கள், தாங்கள் தயாரித்த மூலப்பிரதியை வைத்தே நாடகத்தை அரங்கேற்றினார்கள். இதனால் கோபமடைந்த காவல்துறை இவரைக் கைதுசெய்தது மட்டுமன்றி கடும் சித்திரவதைக்கும் இவரை உள்ளாக்கியது.

இவ்வகையில் இவரது கலைப்பயணமும் ஒரு கலகமாகவே தொடங்கியது.

மெல்பேணில் "அப்பவே சொன்னாளே" என்றொரு நாடகத்தையும் பொன்.சத்தியநாதன் அவர்கள் தயாரித்து அரங்கேற்றினார். ஏறத்தாள மூன்று மணித்தியாலங்கள் நீண்ட அந்த நாடகத்தை அரங்குநிறைந்த மக்கள்கூட்டம் இரசித்திருந்தது.

"பதவி" என்கிற ஒரு நாடகத்தையும் மாவீரர்நாளில் தயாரித்து அளித்தார்.

இவற்றைவிட 1994 இல் ஒரு குறும்படத்தைத் தானே இயக்கித் தயாரித்தார். புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழில் வெளிவந்த முன்னோடிக் குறும்படங்களுள் ஒன்றாக இது இருக்கக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருமனிதர் மருத்துவர் பொன் சத்தியநாதன



"வலது கரம் கொடுப்பது, இடது கரத்திற்குத் தெரியாது" என்று வள்ளல்கள் குறித்துச் சொல்லாடல் உண்டு. ஆனால் எமது சத்தியநாதன் ஐயாவின் வலது கரம் மட்டுமல்ல, இடது கரமும் இறுதிவரை வாரிக் கொடுத்துக் கொண்டேதான் இருந்தது. இந்த மாமனிதனின் வள்ளல் தன்மையால், வாழ்வு பெற்றோர் ஏராளம்! ஏராளம்!! அன்னாரின் தமிழ்ப் பற்றும், தமிழீழப்பற்றும் எல்லைகளைக் கடந்தவையாகும். இப்படிப்பட்ட பெருமகனின் இழப்பு என்பது, ஒஸ்ரேலியத் தமிழர்களுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்தத் தமிழினத்திற்கே பேரிழப்பாகும். வள்ளுவம் குறித்து அன்னார் கொண்டிருந்த பற்று, எல்லை கடந்த ஒன்றாகும். வள்ளுவரின் சிலைகள் இன்று எம்மவர் இல்லங்களை அலங்கரித்து நிற்பதன் காரணம், அவரது கொடைதான்.

எமது தமிழீழத் தேசியத் தலைவர்மீது சத்தியநாதன் ஐயா அவர்கள் கொண்டிருந்த அன்பு அளப்பரியதாகும். சமாதானக் காலத்தில் தமிழீழம் சென்று, மிகப் பாரிய வளர்ச்சிப் பணிகளைத் தன் சொந்தச் செலவிலேயே செய்து முடித்தவர்தான் எமது மருத்துவர் ஐயா அவர்கள்.

எமது தேசியத் தலைவர் அவர்கள் என்னிடம் சத்தியநாதன் அவர்களின் சமூகப் பணிகளை விவரித்தபோது எனக்கு மலைப்பாக இருந்தது. அவர் தமிழீழத்துப் பணிகளுக்கு மட்டுமன்றி தமிழகம் மற்றும் மலேசியாவிலும் வாரி, வாரிக் கொடுத்திருக்கிறார் என்பதும் சில துறைகளில் இணைந்து வேலை செய்ததற்காக தலைவர் அவர்களின் பாராட்டையும் பெற்றுள்ளார் என்பதையும் அறிந்து கொண்டேன்.

ஈழவேந்தன் ஐயா, முன்னர் மெல்பேர்ண் வந்தபோது, அவரை நான் சத்தியநாதன் ஐயாவின் இல்லத்திற்கு அழைத்துச் சென்றேன். சற்று நேரத்திற்குப் பின்னர், "என்னுடன் தனியாகப் பேசவேண்டும்" என்று, அவரது அறைக்குள் அழைத்துச் சென்றார். உள்ளே சென்றதும் "சபேசன், நான் கெதியாகச் சாகப் போகிறேனடா, எல்லாம் மறந்து போகிறது." என்று சொல்லிக் கண் கலங்கினார். நானும் என்னை அறியாது கலங்கினேன். இன்று அதை நினைத்தும் அழுகின்ற நிலை எனக்கு ஏற்பட்டுவிட்டது.

மருத்துவர் சத்தியநாதன் ஐயா போற்றிய திருவள்ளுவரின் திருக்குறள்தான், அவரின் மறைவைப்பற்றிச் சரியாகச் சொல்லக் கூடும்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."

-சபேசன் - மெல்பேர்ண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாராது வந்துதித்த தமிழ்வள்ளல் மருத்துவர் பொன்.சத்தியநாதன்

1991ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு நான் புலம்பெயர்ந்து வந்து இரண்டு மாதங்களிலேயே எனக்கு அறிமுகமாகி என்நெஞ்சில் நீங்கா இடம்பிடித்துக் கொண்டவர் மருத்துவர். அன்றிலிருந்து அவருக்கும் எனக்குமான நட்பு தமிழுக்கும் இனிமைக்குமுள்ள தொடர்பைப் போல இறுகிப்பிணைந்து தொடர்ந்தது.

அவரது பேச்சில் கேலியும் கிண்டலும் நகைச்சுவையும் கலந்திருக்கும். எதனைப்பற்றிப் பேசினாலும் இறுதியில் தமிழ்மொழி, தமிழினம் என்கிற புள்ளியைச் சுற்றியே அவரது கருப்பொருள் வந்துநிற்கும். தமிழ்மொழி மீது தணியாத பற்றும் தமிழினத்தின் மீது தன்னிகரற்ற பாசமும் கொண்டு தனது வாழ்நாள் முழுவதும் அரும்பணியாற்றிய அற்புதமான மனிதர் அவர்.
அவர் மெல்பேணிலே ஒரு தமிழ் நூலமொன்றை அமைத்தார். தமிழ் அச்சுக்கூடத்தினை நிறுவினார். "தமிழ் உலகம் - Tamil" என்ற இருமொழிப் பத்திரிகையை நடாத்தினார். தமிழினத்தின் விடுதலைக்காக வாரிவாரி வழங்கினார்.

மொழிக்காகவும் இனத்துக்காகவும் விருப்போடு அவர்செய்த பணிகளால் பெரும்பொருளை இழந்தது மட்டுமன்றி தாங்கமுடியாத இடர்களையும் எதிர்கொண்டார்.
"தமிழ் இல்லம்" ஒன்றை அமைப்பதும், தமிழ்மொழி உச்சரிப்பு ஆய்வில் சாதனை புரிவதும் அவரது இலட்சியங்களாக இருந்தன. அவை நிறைவேறாமலேயே போனமை தமிழினத்தின் துரதிஸ்டமாகும்.


தமிழிலும் ஆங்கிலத்திலும் மிகுந்த அறிவும், ஆற்றலும் கொண்ட மருத்துவர் அவர்களுக்கு சிங்களம், மலையாளம், தெலுகு, ஹிந்தி முதலிய மொழிகளிலும் நல்ல பரிச்சயம் இருந்தது.
எத்தனை இரவுகள்! எத்தனை பகல்கள்! அவரோடிணைந்து பணியாற்றிய ஒவ்வொரு மணித்துளியும் வாழ்வில் ஒப்பற்ற அனுபவங்கள். அந்த நினைவுகள் காலத்தால் அழியாது எப்போதும் நெஞ்சில் நிலைத்திருக்கும். நினைத்துப் பார்க்கும் போதெல்லாம் சோகத்தினால் தொண்டை இறுகும், கண்ணீர் பெருகும்.
மதங்களைக் கடந்து, மனிதநேயத்துடன் வாழ்ந்த மொழிப்போராளி, தமிழ் வள்ளல் என்னருமை நண்பர் மருத்துவர் சத்தியநாதன் அவர்களின் ஆன்மா பிறப்பு இறப்பு இல்லாப் பேரின்பப் பெருவாழ்வில் கலக்கட்டும்.
வாழ்க தமிழ்!

- சட்டத்தரணி சு.சிறிஸ்கந்தராசா (பாடும் மீன்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போரினாற் சிதைந்திருந்த எமது தாயகப்பகுதியையும் தமிழ்மக்களையும் தூக்கி நிறுத்தவேண்டுமென்று மருத்துவர் அயராதுழைத்தார். வன்னிக்கு நவீன நுட்பக்கருவிகளைத் தருவித்ததோடு மட்டுமன்றி பொதுமக்களுக்கு நியாயவிலையில் கணினி உட்பட இலத்திரனியல் உபகரணங்கள் கிடைக்க வேண்டுமென அவர் விரும்பினார்.

இதனால் போராளிகளின் துணையோடு ஓர் இலத்திரனியற் பொருட்கள் விற்பனை நிலையத்தையும், திருத்தகத்தையும் கிளிநொச்சியில் அமைத்திருந்தார். அதன்மூலம் தமிழ்மக்களுக்கு நவீன கருவிகள் நியாயவிலையில் கிடைக்க வழிசெய்தார். "தமிழ்க்கணினி, மின்னியல் மையம்" என்ற பெயரில் அவர் திறந்திருந்த அவ்விற்பனை நிலையத்தின்மூலம் பலனடைந்தவர்கள் ஏராளம்.

கிளிநொச்சி நகரம் கடையடைப்புப் போராட்டம் நடாத்தியபோது எடுக்கப்பட்ட புகைப்படத்தில் இருக்கிறது அவ்விற்பனை நிலையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**HARTLEY COLLEGE PAST PUPILS ASSOCIATION OF VICTORIA**
P.O.Box 5322, Pinewood, Vic, 3149 Australia

**இரங்கல் செய்தி!**

**அமரர்.வைத்திய கலாநிதி திரு.பொன்னையா சத்தியநாதன்**

திரு.பொ.சத்தியநாதன் அவர்களின் இழப்பானது மெல்பேர்ண் வாழ் தமிழ் சமூகத்துக்கு மட்டுமல்ல உலகெங்கும் பரந்து வாழும் தமிழ்ச்சமூகத்துக்கும் ஒரு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு.

இவர் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியில் 1957ஆம் ஆண்டு தொடக்கம் 1965ஆம் ஆண்டுவரை கல்வி கற்றார். கல்லூரியில் படிக்கும் காலத்தில் கல்வியில் மட்டும் அல்ல விளையாட்டுத்துறையிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் இருந்தார்.பட்டப்படிப்பில் சிறந்த வைத்திய கலாநிதியாக பட்டம் பெற்று தாயகத்தில் உள்ள மக்களுக்கு சேவையாற்றினார். அதன் பின்னர் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்து சுமார் 35 வருடங்களுக்கு மேலாக இந்த மண்ணில் தன்னுடைய பணியை செவ்வனே செய்தார். புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வாழ்ந்தாலும் தன்னுடைய மக்களையும் மண்ணையும் இறுதி மூச்சுவரை அவர் உயிராய் நேசித்தார்.

இவர் ஒரு மிகச்சிறந்த சமூகசேவையாளன். எல்லோராலும் மதிக்கப்பட்ட உன்னதமான மனிதநேயமிக்க மனிதன். தன் மண்ணையும் மக்களையும் தாய்மொழி தமிழையும் நேசித்த நாட்டுப்பற்றாளன். ஈழத்தில் மட்டுமல்ல தமிழ்நாட்டிலும் பல தமிழ் அறிஞர்களோடும் நாட்டுப்பற்றாளர்களோடும் நெருங்கிய தொடர்பில் இருந்தார். அதன் மூலமாக பல நல்ல பணிகள் பலவற்றை செயலில் செய்து காட்டினார்.

திருக்குறள் காட்டிய சீரிய வாழ்வியல் நெறிமுறைகளைப்பின்பற்றி வாழ்ந்துகாட்டியதோடு மட்டும் நின்றுவிடாது;அதன் சிறப்பை மற்றவர்களுக்கும் எழிய முறையில் எடுத்தியம்பி அவர்களையும் அதன் வழி நடக்க ஊக்கம் கொடுத்தார். தமிழ்மொழியை நவீன கணணி யுகத்தில் மொழிபெயர்ப்பு செய்யவும், புதிய எழுத்து சீர்திருத்தத்தை நடைமுறைக்கு கொண்டுவர உலகெங்கும் பணியாற்றிய அறிஞர்களில் இவரும் ஒருவர். தமிழ் மொழி மீது கொண்ட காதலால் கடல்கடந்து உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டிலும் கலந்துகொண்ட பெருமை கொண்டவர்.

தாயகத்தில் கல்வியில் திறமையை வெளிப்படுத்திய பல மாணவர்களை உயர்கல்விக்காய் அவுஸ்திரேலியா அழைத்து அவர்களை தன் சொந்த உழைப்பிலும் அரவணைப்பிலும் நல்ல நிலைக்கு ஆளாக்கிய பெருந்தகை இவர்.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் உடல்நலம் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளையிலும் கூட அவரை ஈழத்தமிழ்ச்சங்கம் அழைத்து வந்து ஆயிரக்கணக்கான மெல்பெர்ண் வாழ் தமிழ்மக்கள் முன் கௌரவம் அளித்தது.இது அவர் இந்த சமூகத்துக்கு செய்த உயர்ந்த சேவைக்கு அளிக்கப்பட்ட உயரிய கௌரவிப்பாகும்.

அவரின் மறைவால் துயரத்தில் வாடும் அவரது அன்பு மனைவி திருமதி. தேவநளாயினிக்கும், உறவினர்களுக்கும்,நண்பர்களுக்கும் எங்களுடைய ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம்.

வைத்தியகலாநிதி அமரர்.திரு.பொ.சத்தியாநாதன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**நவரத்தினம் இளவேந்தன்**
தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HARTLEY COLLEGE PAST PUPILS ASSOCIATION OF VICTORIA
P.O.Box 5322, Pinewood, Vic, 3149 Australia


## Message of condolence

On behalf of the Hartley College Past Pupils Association- Victoria Branch I wish to express our sorrow and sadness at the passing away of a popular Hartleyite Dr P. Sathianathan. Hartley community has lost one of its highly talented, respected and loved members. Dr. Sathianathan is one of the few of the Hartley students who achieved fame and popularity in fields like Tamil language and literature, which was not one of Hartley's scholastic strengths thereby the late Sathianathan has given something back to its alma mater.


Dr. Sathianathan's legacy is manifold. As a practising medical officer he treated the sick and saved lives. As a humanitarian he raised his voice and spent his money. As a crusader for the causes he believed in he was relentless. As a voice for the causes he espoused he was uncompromising. As a relative he did everything within his means to give many a decent start in life. In short he wore many hats each of which he accomplished with a tenacity of purpose. He leaves behind a wife who will struggle to come to terms with his demise; hundreds of grateful relatives; a shattered community; a vacuum that would be hard to fill.

May his soul rest in peace united with his creator.

**C. Kathirgamanathan**
Vice-Patron



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இனத்தின் அன்றைய இன்றைய நாளைய இன அடிப்படை சொல் தமிழம். தமிழம் என்ற சொல்லை ஆரியர் த்ரமிழம் த்ரமிடம் த்ரவிடம் த்ராவிடம் என்று உச்சரிப்பில் மாற்றினர். தமிழர் திராவிடம் என்று எழுத தொடங்கினர். தமிழத்தின் ஏழு அடிப்படையும் மண் வேர் இனம் மொழி நெறி கல்வி பண்பு ஆகும். இந்த ஏழு அடிப்படைகளையும்இந்த நூற்றாண்டுல் வேகமாக வளர்க்காவிட்டால் தமிழம் அழிந்துவிடும். தமிழ் இனம் அழிந்துவிடும்.

வேற்று இனக்காரருக்கு முக்கியமாக ஆரியனுக்கும் அரேபியனுக்கும் ஐரோப்பியனுக்கும் அடிமையாகி தமிழினம் தன் மொழி வளர்ப்பையும் இறைமை அடிப்படையையும் வாழ்க்கை நெறியையும் இன பண்பாட்டையும் அழித்துக்கொண்டு போகிறது.

மண்: தனி மண் இன்றி எந்த இனமும் தன் இனமாக வாழாது அழிந்துவிடும். தமிழ் மண்ணை தமிழர் காப்பாற்றாவிட்டால் தமிழம் அழிந்துவிடும்.

வேர்: ஒரு இனம் தன் மண்ணில் வேர் ஊன்றி வாழ்வதின் அடிப்படை பொருளாதாரம்தான். பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை. பல தமிழர் இன்று வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந்து தமிழர் அல்ல என்று குடியமர்வதின் முதற்காரணம் சுயநல பொருளாதார பெருக்கந்தான். எனவே தமிழ் மண்ணில் பொருளாதாரம் பெருக்கித்தான் தமிழர் வேர் ஊன்ற முடியும்.

இனம்: எங்கள் மண்ணில் எங்கள் இன எண்ணிக்கையை பெருக்காவிட்டால் வேறு இனக்காரர் தம் எண்ணிக்கையை எங்கள் மண்ணில் கூட்டினால் எம் இனம் அழிக்கப்பட்டுவிடுவோம். அதற்கு இரண்டு ஆதரவுகள் அவசியம். அவை சுகாதார ஆதரவும் இனப்பெருக்க ஆதரவும் ஆகும்.

மொழி: ஆரியர் அரேபியர் ஐரோப்பியர் போன்ற வேற்று மொழிக்காரருக்கு அடிமைப்பட்டு தமிழை இழந்தோம் இழக்கிறோம் இழப்போம். பண்டையமொழி சிறந்தமொழி இலகுவானமொழி தமிழ். இன்று அது பணம் பெருக்காத மொழி. அதனால் அதை விற்று வாழ்கிறோம். ஆங்கிலத்தைவிட இலகுவாக தமிழில் அறிவை வளர்க்கலாம். இன்றைய சூழ்நிலையில் கிரந்தத்துக்கும் ஆங்கிலத்துக்கும் அடிமையாகி தமிழ் மொழியை கேவலப்படுத்துகிறோம்.

நெறி: ஆரியர் அரேபியர் ஐரோப்பியர் போன்ற வேற்று இனக்காரருக்கு அடிமைப்பட்டு மதத்தை விற்று நெறியை இழந்தோம் இழக்கிறோம். எந்த மதத்தில் இருந்தாலும் ஆதியில் இறைமை கொடுத்த வாழ்க்கை நெறியாகிய வள்ளுவத்தை ஏற்று வாழாவிட்டால் இன ஒற்றுமை அழிந்துவிடும்.


இக் கட்டுரை பொன் சத்தியநாதன் அவர்களால் படைக்கப்பட்டது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழம்




நெறி: ஆரியர் அரேபியர் ஐரோப்பியர் போன்ற வேற்று இனக்காரருக்கு அடிமைப்பட்டு மதத்தை விற்று நெறியை இழந்தோம் இழக்கிறோம். எந்த மதத்தில் இருந்தாலும் ஆதியில் இறைமை கொடுத்த வாழ்க்கை நெறியாகிய வள்ளுவத்தை ஏற்று வாழாவிட்டால் இன ஒற்றுமை அழிந்துவிடும்.


கல்வி: இன்றைய மணத்துக்காக ஆங்கிலத்துள் அடிமையாகி எல்லா துறையிலும் தமிழை வளர்த்து தமிழ் மூலம் எல்லா கல்வியையும் வளர்ப்பதில்லை.தமிழ் மொழி மீட்பின் பின்புதான் தமிழ் கல்வி மீட்பு வேகமாகும்

பண்பு: இன்றைய பணத்துக்காக மற்றைய இனக்காரருக்கும் மதக்காரருக்கும் அடிமையாகி தமிழ் பண்பை கெடுக்கிறோம். வள்ளுவ நெறியின் அடிப்படையில் வாழாவிட்டால் தமிழ் பண்பு அழிந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்




PERMIAN 225 million years ago
TRIASSIC 200 million years ago
JURASSIC 135 million years ago
CRETACEOUS 65 million years ago
PRESENT DAY

பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு உலக கண்டங்கள் வெவ்வேறு விதமாக இணைனந்திருந்தன. 25 கோடி (250 மில்லியன்) ஆண்டுகளுக்கு முன்பு ஆபிரக்கா அவுசுத்திரேலியா ஈழமூர் மூன்றும் உடைந்து பிரிந்து நகரத்தொடங்கியது.

அங்கே நாடுகள் பிரியும் முன்பே ஒரே பேச்சு மொழி (இயல் மொழி) அடிப்படை தொடங்கிவிட்டது. ஈழமூர் கண்டத்தில் தமிழ்மொழி வளரத்தொடங்கியது. அந்த காலத்தில் குறில் நெடில் இல்லாத சூழ்நிலையில் எம் மொழியை இழ் (ஈழ்) என்றோம். குறில் நெடில் இல்லாத காலத்தில் இழ் ஈழ் இரண்டுக்கும் பேதமில்லை. பிற்காலத்தில் தம் + மொழியை (தம் + இழ்) தமிழ் என்று புணர்த்தி பயன்படுத்த தொடங்கினர். அந்த மொழி நாட்டை இழம் (ஈழம்) என்றோம். அந்த ஊர் பிரதேசங்களை இழமூர் (ஈழமூர்) என்றோம்.இந்த ஈழமூர் நாடு கிட்டத்தட்ட 4 கோடி ஆண்டுகளுக்கு முன்பு ஆசியாவுடன் மோதி இணைந்தது.

ஐரோப்பியர் ஈழமூரை (Lamur) என்று எழுதினர். பின்பு தமிழ் நாட்டின் வடபகுதியினர் ஈழமூர் என்ற பெயரையும் தென்பகுதியினர் (இலங்கை) ஈழம் என்ற பெயரையும் கூடுதலாக பயன்படுத்தினர். வடபகுதியினர் ஆசியாவுக்கூடாக ஆசியா ஐரோப்பாக்கு பண்டைய இழ் மொழி அடிப்படையை பரப்பினர். அந்த நாடுகளில் ஈழமூர் என்ற தமிழ் நாட்டு பெயரை ழமூர் (Lemur) என்று பதிந்தார்கள். பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவும் இலங்கையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே நாடாக இருந்தபோது ஆசியாவுடன் இணையாது தனித்தமிழ் நாடாக இருந்தபோது அந்த நாட்டின் பெயர் ஈழமூர் என்று இருந்தது.

முதலில் வட ஈழமூர் (வட இந்தியா) ஆரியனுக்கு அடிமையாகியது. ஐயாயிரம் ஆன்டுகளுக்கு முன்பு வட ஈழமூர் ஆரியத்துக்கு அடிமையாகி இழ் மொழியொடு ஆரியமொழியை புகுத்தி சமசுக்கிருதம உருவாக்கி வட ஈழமூரில் பல மொழிகள் உருவாக்கப்பட்டன. பின்பு தென் ஈழமூர் (தென் இந்தியா இலங்கை) ஆரியனுக்கு அடிமையாக்கப்பட தொடங்கியது. பின்பு அங்கே தெலுகு கன்னடா மொழிகள் உருவாக்கப்பட்டன.

தென் ஈழநாட்டு பிரதேசம் பௌத்த ஆரியத்துக்கு அடிமையாகி தமிழை சிங்களம் ஆக்கப்பட்டது. எண்ணூறு ஆன்டுகளுக்கு முன்பு சேரநாடு ஆரியத்துக்கு அடிமையாகி மலையாளம் என்று தொடக்கப்பட்டது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தென் ஈழமூர் பிரதேசத்தில் சோழநாடு பாண்டிநாடு சேரநாடு ஈழநாடு என நாலு தமிழ் நாடுகள் இருந்தன. 1000 வருடங்களுக்கு முன்பு சேர சோழ பாண்டிய ஈழ நாடுகளில் தமிழ் இருந்தன.

தமிழ் நாடுகளாய் இருந்தன. 800 வருடங்களுக்கு முன்பு கிரந்தத்த்கு அடிமையாகி சேரத்தமிழ் மலையாளம் ஆகியது. அந்த காலத்தில் மொழியை விற்கும்போது இனத்தின் பெயரையும் மாற்றினார்கள்.

இப்போது சோழ பாண்டிய ஈழ நாடுகளில் ஆங்கிலத்துக்கும் கிரந்த்த எழுத்துக்களுக்கும் அடிமையாகி தமிழ் கேவலம் ஆகிறது.

தனி மண் இன்றி எந்த இனமும் தன் இனமாக வாழாது அழிந்துவிடும். உலகத்தில் இது இப்போது வேகமாக நடைபெறுகிறது. தனி மண் இருந்திருக்காவிட்டால் இன்று ஆங்கிலம் வளர்ந்திருக்காது. தனி மண் இல்லாவிட்டால் இந்த நூற்றாண்டில் தமிழும் அழிந்துவிடும்.

## வேர்

ஒரு இனம் தன் மண்ணில் வேர் ஊன்றி வாழ்வதற்கு பொருளாதாரம்தான் அடிப்படை. பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை. பல தமிழர் இன்று வெளிநாடுகளில் குடிபெயர்ந்து தமிழர் அல்ல என்று குடியமர்வதின் முதற்காரணம் சுயநல பொருளாதார பெருக்கந்தான். எனவே தமிழ் மண்ணில் பொருளாதாரம் பெருக்கித்தான் வேர் ஊன்ற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனம்

எங்கள் இன எண்ணிக்கையை பெருக்காவிட்டால் இனமீட்பு நடக்காது. வேறு இனக்காரர் எம் மண்ணில் குடியேறி தம் எண்ணிக்கையை கூட்டினால் நம் இனம் அழிக்கப்ப்டு தமிழும் அழிக்கப்படும்.. அதற்கு இரண்டு ஆதரவுகள் அவசியம். அவை இனப்பெருக்க ஆதரவும் சுகாதார ஆதரவும் ஆகும். இரண்டுக்கும் இரண்டுக்கு குறைவாகவும் பிள்ளைகளை பெற்றால் எம் எண்ணிக்கை குறையும். மூனறுக்கும் மூனறுக்கு குறைவாகவும் பிள்ளைகளை பெற்றால் எம் எண்ணிக்கை கூடாது. நூாலுக்கு குறையாமல் பிள்ளைகளை பெற்றால் மட்டுமே எம் எண்ணிக்கை கூடும். இனம் அழியாமல் சுகாதார உதவியுடன் வாழ்வதற்கு இனத்துக்கு மருத்துவ உதவி அவசியமாகும்.

# மொழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியர் அரேபியர் ஐரோப்பியர் போன்ற வேற்று இனக்காரருக்கு அடிமைப்பட்டு மதத்தை விற்று நெறியை இழந்தோம் இழக்கிறோம் இழப்போம். ஆரியர் ஐரோப்பியர் மதத்துக்கு மாறினாலும் தமிழர் என்று பதிவதை மறுக்கவில்லை. அரேபியர் மதத்துக்கு மாறியவுடன் தமிழர் ஈழத்தில் தமிழர் அல்ல முசுலீம் என்று வேறு இனமாக பதிகிறார்கள். இதை சட்டவிரோதம் ஆக்காவிட்டால் சிங்களவரும் தமிழரும் இலங்கையில் ஒரு நூற்றாண்டுள் அழிந்துவிடுவார்கள். எந்த மதத்தில் இருந்தாலும் ஆதியில் இறைமை கொடுத்த வாழ்க்கை நெறியாகிய வள்ளுவத்தை கற்று இறைமையை ஏற்று வாழாவிட்டால் இன ஒற்றுமை அழிந்துவிடும்.

ஆரியர் அரேபியர் ஐரோப்பியர் போன்ற வேற்று இனக்காரருக்கு அடிமைப்பட்டு மதத்தை விற்று நெறியை இழந்தோம் இழக்கிறோம் இழப்போம். எந்த மதத்தில் இருந்தாலும் ஆதியில் இறைமை கொடுத்த வாழ்க்கை நெறியாகிய வள்ளுவத்தை கற்று இறைமையை ஏற்று வாழாவிட்டால் இன ஒற்றுமை அழிந்துவிடும்.

ஈழமூரின் மத அடிப்படை வள்ளுவத்தில் புரிகிறது. அறம் பொருள் குடும்பம்(இன்பம்) அடிப்படை. அறம் பொருள் இரண்டையும் பயன்படுத்தி குடும்ப ஒற்றுமையை வளர்த்து நரகமாகிய உலகத்தை மோட்சம் ஆக்குவதே வாழ்க்கையின் நோக்கம்.

ஏனெனில் இறப்பின் நரகத்தையும் மோட்சத்தையும் கண்டவர் மீண்டதில்லை.

இங்கு வாழ்பவர் கண்டதில்லை.

இது பயமுறுத்தல் கொள்கை.

## கல்வி

இந்தியாவிலிருக்கும் தமிங்கில நாட்டு ஊடகங்களும் அரசும் தமிழ் மூலம் கற்பதை கெடுக்கிறது. மண்மீட்பு மொழிமீட்பின் பின்புதான் தமிழ் கல்வி மீட்பு வேகமாகும்

இந்தியாவிலிருக்கும் தமிங்கில நாட்டு ஊடகங்களும் அரசும் தமிழ் மூலம் கற்பதை கெடுக்கிறது. மண்மீட்பு மொழிமீட்பின் பின்புதான் தமிழ் கல்வி மீட்பு வேகமாகும்

## பண்பு

இந்தியாவிலிருக்கும் தமிங்கில நாட்டு ஊடகங்களும் அரசும் தமிழ் பண்பை வளர்ப்பை கெடுக்கிறது. மண்மீட்பு நெறிமீட்பின் பின்புதான் தமிழபண்பு மீட்பு வேகமாகும்.

இந்தியாவிலிருக்கும் தமிங்கில நாட்டு ஊடகங்களும் அரசும் தமிழ் பண்பை வளர்ப்பை கெடுக்கிறது. மண்மீட்பு நெறிமீட்பின் பின்புதான் தமிழபண்பு மீட்பு வேகமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர் ஒலிகள்

அ பின்வாய் ஒலி இ முன்வாய் ஒலி உ சொண்டை ஒலி

(ம்) மூகக்கு ஒலி (ல்) நாக்கு ஒலி (ர்) நாக்கு அதிர் ஒலி

## தொடரா ஒலிகள்

க் பின்வாய் ஒலி ச் முன்வாய் ஒலி ப் சொண்டை ஒலி

ட் பின்நாக்கு ஒலி த் முன்நாக்கு ஒலி ற் நுனிநாக்கு ஒலி

தொடர் ஒலியை தொடரா ஒலி தொடர்ந்தால் மட்டுமே தொடரா ஒலியை கிரகிக்க முடியும். உதாரணம்: க்அ(க)

இந்த ஒலிகளின் அடிப்படையில் வரிவடிவ உருவாக்கம் தொடக்கப்பட்டது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு 12 உயிர் எழுத்துக்களும் 18 மெய் எழுத்துக்களும் முடிபு எடுக்கப்பட்டன.

## உயிர் எழுத்துக்கள் உருவாக்கம்

குற்றியலிகரமும குற்றியலுகரமும் ஒரே (இஉ) ஒலிதான்.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அகரமும் (அ) குற்றியலும் (இஉ) தான் தொடர் ஒலிகள்.

பின்பு

முதல் ஒலி அ தொடர்ந்து பயன்படுத்தப்பட்டது

(இஉ) பிரித்து திரித்து இ உ உருவாக்கப்பட்டது.

அ இ சேர்க்கப்பட்டு எ உருவாக்கப்பட்டது.

அ உ சேர்க்கப்பட்டு ஒ உருவாக்கப்பட்டது.

தொடக்கத்தில் குறில் நெடில் பேதமின்றி இவை பயன்படுத்தப்பட்டன.

பிற்காலத்தில் குறில் நெடிலாக பிரித்து பயன்படுத்தப்பட்டன.

அ ஆ

இ ஈ

உ ஊ

எ ஏ

ஒ ஓ

அ இ இணைக்கப்பட்டு ஐ உருவாக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ உ இணைக்கப்பட்டு ஔ உருவாக்கப்பட்டது.

தொடக்கத்திலிருந்து ஐ ஔ நெடிலேதான்.

பின்பு அ இ உ எ ஒ நெடில் ஆக்கப்பட்டன.

மெய் எழுத்துக்கள் உருவாக்கம்

(ம்) (ல்) (ர்) மூன்று தொடர் ஒலிகளையும் இணைத்து தொடரமுடியாத காரணத்தால் உயிர் எழத்தாக பயண்படுத்தமுடியாமல் மெய் எழுத்துக்களுள் சேர்க்கப்பட்டன.

ஆதியில் க் ச் ப் ஒலி இருந்கன.

பின்பு ட் த் ஒலி சேர்க்கப்ட்டன.

கடைசியாக ற் ஒலி சேர்க்கப்ட்டது.

பின்பு க் ச் ட் த ப் ற் ஒலிகளுடன் (ம்) சேர்க்கப்பட்டு ங் ஞ் ண் ந் ம் ன் ஒலிகள் உருவாக்கப்பட்டன.

(க்(ம்)) ங்

(ச்(ம்)) ஞ்

(ட்(ம்)) ண்

(த்(ம்)) ந்

(ப்(ம்)) ம்

(ற்(ம்)) ன்

இ நேரத்தை அரைவாசியாக்கி ய் உருவாக்கப்பட்டது.

உ நேரத்தை அரைவாசியாக்கி வ் உருவாக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ŗ) இல் இருந்து ŗ உம் ழ் உம் உருவாக்கப்பட்டன.

(ல்) இல் இருந்து ல் உம் ள் உம் உருவாக்கப்பட்டன.

∴ தூய தமிழ் வரிவடிவமல்ல. தவறாக புகுத்தப்பட்டது.

ஆரியர் புகுந்த பின்பு தமிழ் மொழியை பிரித்து அழித்து கிட்டத்தட்ட 20 மொழிகளை உருவாக்கியதின் அடிப்படை என்ன?

தமிழ் ஒலிகள் அகலமான ஒலிகள். ஒவ்வொரு உயரொலி மெய்யொலிகளின் இரண்டு எல்லையிலும் இடையிலும் பேச்சுருவாக்கமும் காதுக்கிரகிப்பும் சிறிய மாற்றத்தை கொடுப்பதால் மூளையறிவு வேறுபாட்டை புரிந்துகொள்ளும். அந்த ஒலியின் மாற்றத்ததை சரியாக எப்பபோதும் உச்சரிக்கமுடியாது. அதனால் தமிழ் மாற்ற ஒலிகளுக்கு வரிவடிவம் கொடுக்கவில்லை. ஆரியர் அந்த ஒலிமாற்றத்துக்கும் வரிவடிவங்களை உருவாக்கி தங்கள் மொழி அம்சங்களையும் புகுத்தி தமிழிலிருந்து உருவாக்கிய சமசுக்கிருதம் போன்ற மொழிகள் நீண்டகால சாத்தியம் இல்லாமல் அழிந்துபோயின. ஆனால் தொடர்ந்து வட ஈழமுர் தமிழுள் அவற்றை புகுத்தி கிந்தி போன்ற மொழிகளையும் தென் ஈழமுர் தமிழுள் தெலுகு கன்னடத்தையும் சேரநாட்டில் மலையாளாத்தையும் ஈழத்தில் சிங்களத்தையும் உருவாக்கினர்.

தமிழில் இன்று நடைபெற்றுவரும் வேற்று மொழி தாக்கத்தையும் நாளை நடைபெறக்கூடிய வேற்று மொழி தாக்கத்தையும் தடுத்து தமிழ் மொழியை வளர்த்தால் உலகின் சிறந்த மொழியை வளர்த்துக்கொண்டு போகலாம்.

உயரொலி மெய்யொலிகளின் இரண்டு எல்லையிலும் இடையிலும் வரும் ஒலிகளையும் ஆரியர் உருவாக்கிய வரிரடிவங்களையும் பார்ப்போம்.

| அ | |
|---|---|
| D | Dz |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| க் | | |
|---|---|---|
| k | g | h |

| ச் | | |
|---|---|---|
| ch | j | s |

| ப் | |
|---|---|
| p | b |

# நெறி

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சைபீறியாவில் மழை குளிர் பிரச்கனையால் மக்கள் வெளியேறி ஐரோப்பா நடுகிழக்கு ஈழமூர் நாடுகளில் குடிஹேயத்தொடங்கினர்.

பரப்பப்பட்டடிருந்த இழ் மொழியின் அடிப்படையில் ஐரேப்பா நடுகிழக்கு நாடுகளில் மொழி மாற்றமும் வரிவடிவ உருவாக்கமும் தொடங்கியது.

சைபீறியர் கொண்டுவந்த மத அடிப்படையில் சூ(துரு)த மதமும் பின்பு சூத மத அடிப்படையிலிருந்து இசுலாமியமும் உருவாக்கப்பட்டது.

சைபீறியாவிலிருந்து பரவி ஈழமூருக்கு புகுந்தவரை ஆரியர் என்றோம்.

அவரது அடிப்படையில் இந்து மதம் புகுத்தப்பட்டது.

அதாவது இறப்பின் பின் நரகத்திற்கோ மோட்சத்திற்கோ போகவேண்டும் என்பதே.

இந்த பயமுறுத்தல் கொள்கையை வைத்து ஆதியில் ஆரியரும் பின்பு அரேபியரும் ஐரோப்பியரும் தமிழனத்தை அழித்துக்கொண்டு போகிறார்கள்.

எனவேதான் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பண்டைய தமிழ இறைமை அடிப்படையையும் வாழ்க்கை நெறியையும் இன பண்பாட்டையும் திருக்குறளில் எழுதிப்பரப்பி எமது வாழ்க்கை அடிப்படையாகிய வள்ளுவநெறியை பரப்பத்தொடங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவ நெறியின் வாழ்க்கை அடிப்படை அறம் பொருள் இன்பமே. வீடு இல்லை. ஆரியனுக்கும் அரேபியனுக்கும் ஐரோப்பியனுக்கும் அடிமையாகும் மதங்கள் கூறுவது இறந்தபின் மோட்சம் நரகத்துக்கு போவோம் அதுவே வீடு என்று. இது மற்றைய இனங்களை அழிக்கும் பயமுறுத்தல் கொள்கை.

வள்ளுவ அடிப்படையில் உலகமே நரகம் அதை மோட்சம் ஆக்குவது அறம் பொருள் இன்ப வாழ்க்கையே.

இன்பம் என்பது கணவனும் மனைவியும் இன்பமாக ஒற்றுமையாக பிள்ளைகளை வளர்த்து வாழ்வதே. சில மனைவிகளும் கணவர்களும் ஆர்வம் இல்லாமல் ஒற்றுமை இல்லாமல் பிள்ளைகளை வளர்க்காமல் வள்ளுவ இன்ப வாழ்க்கையை அழித்துவிடுகிறார்கள்.

பொருள் என்பது பொருளாதார பெருக்கம். பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை. நரகமாகிய உலகத்தை மோட்சமாக்குவது பொருளாதாரம் பெருக்கி தனக்கும் குடும்பத்துக்கும் சமுதாயத்துக்கும் அர்ப்பணிப்பதே.

அறம் என்பது இறைமையை பின்பற்றி நரக உலகத்தை மோட்சமாக்கி என்னையும் குடும்பத்தையும் சமுதாயத்தை ஒற்றுமையாக வளர்ப்பதே. இறைமை என்பது உலகத்தில் ஒன்றேதான்.

இறைமை என்பது ஒரு இனத்துள் புகுந்து ஒருவனை இறைவனாக்கி மற்றைய இனத்தை அழித்து அடிமையாக்குவதில்லை. ஆனால் ஆரியனும் அரேபியனும் ஐரோப்பியனும் இறைமையை தம் இனத்துள் இறைவன் என்றாக்கி இறப்பின் பின் நரகம் மோட்சம் என்ற பயமுறுத்தக்கொள்கையை புகுத்தி மற்றைய இனங்களை அழிக்கிறார்கள்..

## இறைமை வாழ்த்து

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே உலகு

அகர முதல எழுத்தெல்லாம் இயல் மொழியின் அடிப்படை. ஆதி என்பது தொடக்கம். எனவே மொழிதான் எமது வாழ்வின் தொடக்கம். இயல் இசை நடனம் (இம்மூன்றும் சேர்ந்தால் நாடகம்) மொழியின் அடிப்படைகள். இசையும் நடனமும் தான் மிருகங்கள் கூடுதலாக பயன்படுத்துகின்றன. நாம் குரங்கு மிருகத்தில் இருந்து மனிதராக 250 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வளர்ந்தபோது இயல் மொழியை வளர்க்க தொடங்கினோம். எனவே இயல

மொழியாகிய அகர முதல எழுத்தெல்லாம் எமது தொடக்கம் (ஆதி).

பகவன் என்பது இறைமை அதுவே உலகின் முதன்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுடமை

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்ப தறிவு

எந்த பொருள் பற்றியும் யார் யாருடைய வாய் சொல்லையும் பேச்சையும் கேட்டு அறிந்தாலும் அப்பொருளின் மெய்ப்பொருளையும் உண்மையான பயனையும் அறிந்து கொள்வதே அறிவாகும். பிழையாக விளங்கி செயற்படுவது தவறாகும்.

மெய்யுணர்தல்

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு

எந்த பொருள் எத்தன்மை உடையதாக இருந்தாலும் அப்பொருட்களின் வெளித்தோற்றத்தை கண்டு மயங்காமல் உண்மையான தன்மையை அறிந்து கொள்வதுதான் மெய் உணர்வாகும்.

எனவே நான் மேலே சொல்லும் எழுதும் விடயங்களையும் விபரங்களையும் படித்து மயங்காமல் உண்மையான தன்மையை அறிந்து கொள்வதுதான் மெய் உணர்வாகும். பிழையாக விளங்கி செயற்படுவது தவறாகும்.

வாழ்க்கையின் நோக்கின் அடிப்படை அறம் பொருள் இன்பமே. இன்பம் என்பது கணவன் மனைவியின் ஒற்றுமையான வாழ்க்கை. திருமணத்தின் முன்பு அறம் பொருள் வாழ்க்கையின் அடிப்படையை கற்று மனதில் உறுதியாக பதிந்து வாழ்வின் நோக்கத்தை முடிபெடுத்து விடவேண்டும்.

அறம் பொருள் என்பது சுயநலம் இன்றி தனக்கும் தன் குடும்பத்துக்கும் தன் சமுதாயத்துக்கும் தன் வாழ்வை அர்ப்பணிப்பதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியர் அரேபியர் ஐரோப்பியர் போன்ற வேற்று மொழிக்காரருக்கு அடிமைப்பட்டு தமிழை இழந்தோம் இழக்கிறோம் இழப்போம். பண்டையமொழி சிறந்தமொழி இலகுவானமொழி தமிழ். ஆனால் இன்று அது பணம் பெருக்காத மொழி. அதனால் அதை விற்று வாழ்கிறோம். ஆங்கிலத்தைவிட இலகுவாக தமிழில் அறிவை வளர்க்கலாம். மொழி ஆராய்ச்சியின் பின் தமிழே சிறந்த மொழி இலகுவான மொழி என்பது முடிபாகிவிட்டது. மண் காப்பாற்றலின் பின்புதான் அது சாத்தியமாகும்.

மிருகமாக இருந்தபோது கூடுதலாக பயன்படுத்தப்பட்ட இசைமொழியையும் நடனமொழியையும் பயனபடுத்தினர். 20 கோடி ஆண்டுகளுக்கு முன்பே குரங்கிலிருந்து மனிதன் உருவாக தொடங்கியபோது தமிழர் இயல்மொழி தமிழை (இழை) உருவாக்க தொடங்கி விட்டனர்.

உலகின் பண்டைய மொழி தமிழ் மொழி வளர 20000 வருடங்களுக்கு முன்பு ஒலி அடிப்படையில் வரிவடிவ எண்ணிக்கை கூட்டப்பட்டு 30 என தமிழினம் முடிபெடுத்தது.

உலகத்தின் பண்டையமொழி தூய்மையானமொழி சிறந்தமொழி தமிழே. பல கோடி ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் (இழ்) உருவாகத்தொடங்கியது. மொழி என்பது ஒரு உயிரினத்தின் பேச்சுத்தொடர்பு அடிப்படையாகும். விலங்கு உயிரினத்திலிருந்து மனித உயிரினம் உருவாகியது. ஆதியில் குரங்கிலிருந்து மனிதர் உருவாகினர். விலங்குகளும் தம்முள் மொழிகளை உருவாக்கி வைத்திருக்கின்றன.
மொழிகளின் அடிப்படை அம்சங்கள் மூன்றாகும். அவை இயல் இசை நடனம் (நாடகம்) ஆகும். நாடகம் என்பது இயல் இசை நடனம் மூன்றையும் சேர்ப்பது. விலங்குகள் இசையையும் நடனத்தையும் கூடுதலாக பயன்படுத்துகின்றன. மனிதர் இயலை கூடுதலாக பயன்படுத்துகின்றனர். இயல் மொழி வளர்ப்பால் தான் மனிதர் மிருகத்தைவிட்டு வேகமாக உயரத்தொடங்கினர். மனிதர் இசையையும் நடனத்தையும் நாடகத்தையும் கலாச்சாரமாக வளர்த்து பயன்படுத்துகின்றனர்.

இயல்மொழி பேச்சுக்கிரகிப்பின் அடிப்படை மூன்று அம்சங்கள். அவை

வாயால் பேச்சு (ஒலி) உருவாக்கம்

காதால் பேச்சு கிரகிப்பு

மூளையால் பேச்சு புரிந்து அறிவது.

வுாய் காது மூளை பிரச்சனை இருப்பதால் மிருகம் இயல் மொழி வளர்க்கவில்லை. மனிதர் மிருகத்திலிருந்து மாறியபோது இந்த மூன்றும் வளர்ந்ததால் இயல் மொழி வளர்ந்தது. ஆதியில் பல கோடி ஆண்டுகளாக இயல் மொழி பேச்சு மொழியாக இருந்தது. வரிவடிவமொழி பயன்படுத்தல் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியது. இந்த அம்சங்கள் எல்லாம் தமிழில் (இழில்) தான் ஆதியில் தொடக்கப்பட்டது.

தமிழ்மொழி ஒலியின் ஆதி அடிப்படை இரு வகையாகும். ஒன்று தொடர் ஒலி. மற்றது தொடரா ஒலி. தொடர் ஒலி என்பது தொடர்ந்து மூச்சு திணறும் வரை ஒலிக்க கூடியது. தொடரா ஒலியை தனிமையாக உச்சரிக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவுடன்



17.11.1948 15.09.2017

# தணியாத தமிழ்த் தாகன்

## மரு. பொன் சத்தியநாதன்

ஆழ வேரோடிப் பரந்த தமிழின்
ஆணிவேர் அறிந்தவன் நீ
ஞாலம் பரந்த தமிழினம் நிமிர
யாவும் துறந்தவன் நீ
வாழும் முறையை வள்ளுவன் வழியில்
வாழ்ந்த நெறியன் நீ - தமிழ்
ஈழம் மலர ஈந்து உருகிய
ஈகை வெளிச்சம் நீ

மரு. பொன் தமிழ் வளர்ச்சிக் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன். சத்தியநாதன் அவர்களின் பல பணிகளை எழுத்துக்களில் கொண்டுவந்திருக்கின்றோம் சிலவற்றை சொல்லாமல் தவிர்த்திருக்கின்றோம்.

சிலவற்றை காதோடு சொல்லி இந்த வெற்றுப் பக்கத்தை அப்படியே விட்டுவிடுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தணியாத தமிழ்த் தாகம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org